குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 48] விபவ ஆண்டு மார்கழித் திங்கள் 10-1-89 [இதழ் 2



தருமை ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர்
தருமபுரம் திருமஞ்சனவீதியிலுள்ள
ஸ்ரீ சச்சிதானந்த விநாயகர், வடக்குக் குருமூர்த்த ஆலயங்களின்
மகாகும்பாபிஷேகம் 29—1—89 ஞாயிறு காலை
நடைபெறுவதை முன்னிட்டுக் காட்சி தருகிறார்.

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 48 | 10-1-89 | இதழ் 2

உட்பொருள்

எண் பக்கம்

1 நூதன ஜீரணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகவிழா அழைப்பு ... 57
2 திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு அழைப்பிதழ் ... 64
3 தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ... 69
4 கடிதம் ... 72
5 சைவசித்தாந்தக் கருத்தரங்கம் ... 73
6 விஷ்ணு பக்தி ... 79
7 நீர்க்கடன் ... 84
8 புனிதா! நீ வாழ்க ... 92
9 மேலை நாட்டுத் தத்துவ மேதைகள் ... 93
10 மதிப்புரை .. 97
11 செய்திகள் ... 98
12 எதிர்காலம் .. 100
13 இதழ்வழிச் சைவசமயக் கல்வி IV. பாடம்-12.... 105

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர்

அருள்வாக்கு

தன்பிரம கீதைவே
தாந்தஞ் சிவாகமநூல்
இன்பமுயிர்க் குண்டென்
றியம்பியதேல் — இன்பஞ்சீ
வான்மாவிற் குண்டென்
றறைந்ததன்று நின்றபர
மான்மாவிற் குண்டென்ற தாம்.

— முத்திநிச்சயம் 16

ஆசிரியர் :-
வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியார்

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 48 ★ இதழ் 2

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

விபவ மார்கழி 10—1—1989

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
திருமஞ்சன வீதியிலுள்ள
அருள்மிகு சச்சிதானந்த விநாயகர் திருக்கோயில்
தருமை ஆதீனம் குருமகாசந்நிதானங்களில்
3 ஆவது ஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகள் முதல்
23 ஆவது ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள்
வரையுள்ள பதினைந்து குருமூர்த்த ஆலயங்கள்

நூதன ஜீரணோத்தாரண அஷ்டபந்தன
மகாகும்பாபிஷேகவிழா அழைப்பு

விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலம்உறை இறையே.

— திருஞானசம்பந்தர்.

சிவபெருமான் துதி

மறிசேர் கையினனே மத மாவுரி போர்த்தவனே
குறியே என்னுடைய குரு வேஉன்குற் றேவல்செய்வேன்
நெறியே நின்னடியார் நினைக் குந்திருக் காளத்தியுள்
அறிவே யுன்னையல்லால் அறிந் தேத்த மாட்டேனே.

— சுந்தரர்

திருச்சிற்றம்பலம்

மெய்கண்டார் துதி

பண்டைமறை வண்டரற்றப் பசுந்தேன் ஞானம்
பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்டவர் இதய கமல முகைக ளெல்லாம்
கண்திறப்பக் காசினிமேல் வந்தஅருட் கதிரோன்
விண்டமலர்ப் பொழில் புடைசூழ் வெண்ணைமேவும்
மெய்கண்ட தேவன்மிகு சைவ நாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
பொற்பாதம் எப்போதும் போற்றல் செய்வாம்.

— அருணந்திசிவம்.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் துதி

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்துஎரி பொருந்துவிடம் தெரிந்திடாமல்
தாரணி அன்பரை ஆள அவர்போல வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழில் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்க ணாளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

— சம்பந்தசரணாலயர்.

அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்து நிற்கும் இறைவன், உயிர்கள் உய்யும் பொருட்டு அருளையே திருமேனியாகக் கொண்டு எழுந்தருளி அவ்வுயிர்கட்கு இம்மை, மறுமை, வீடு என்னும் நலங்களை அருளுகின்றான். தனது தனித்த நிலையில் 'சிவன்' என நிற்கின்ற இறைவன் உயிர்களுக்கு நலம் செய்யத் திருவுளம் பற்றிய காலத்தில் அவ்வருளாகிய 'சத்தி' என்னும் அருவ நிலையையும், அதன்பின் 'சதாசிவன்' என்னும் தெய்வத்திருமேனி யாகிய அருவுருவ

நிலையையும், அதன்பின் பல்வேறு வகைப்பட்ட மகேசுர வடிவங்களாகிய உருவநிலையையும் அடைந்து அருள்புரிகின்றான். இதனையே 'சிவம், சத்தி, சாதாக்கியம், ஈசுரம்' என்னும் தத்துவங்கள் வாயிலாகச் சிவாகமங்கள் விளக்குகின்றன. இவற்றுள் சதாசிவநிலை அனைத்துச் செயல்கட்குமே முதலாயிருப்பினும், சிறப்பாக ஞானத்திற்குரிய குருமூர்த்தமாகவே விளங்கி, நான்கு வேதங்கள், இருபத்தெட்டு ஆகமங்கள் என்பவற்றைத் தக்கார் பலருக்கு அருளிச்செய்து அவர்கள் வழியாக உலகத்தில் ஞானம் நிலைபெறச் செய்கின்றது. அனைத்துயிர்கட்கும் அனைத்துநலங்களையும் அருளும் முறையில் நிலவுலகத்தார்க்கு அருள்புரியவேண்டித் திருக்கயிலாயத்தில் சீகண்ட பரமசிவனும் வீற்றிருந்தருளுகின்ற இறைவன், கல்லால் நிழலில் தென்முகக்கடவுளாகிய குருமூர்த்தியாய் எழுந்தருளியிருந்து விநாயகர், முருகர், நந்திதேவர் முதலிய பலர் வழியாக ஞானத்தை நிலவுலகில் நின்று நிலவச் செய்தருளினான். அத்தகைய பரம்பரைகளில் நந்திதேவர் வழித்தோன்றிய மரபுகளில் சனற்குமாரமுனிவர் வழியில்வந்த மெய்கண்ட சந்தானத்தில் கமலைஞானப்பிரகாசர்பால் சொக்கநாதர்பூசையும் ஞானோபதேசமும் பெற்ற ஸ்ரீ குருஞானசம்பந்தர் தம் குருவாணையின் வண்ணம் போந்து நிறுவியருளிய ஞானபீடமே தருமை ஆதீனம். இதனை நிறுவிய இவ் ஆதி பரமாசாரியரது அருள்வாழ்க்கை அரிய பல அற்புதங்கள் நிறைந்தது. இறுதியில் தமது ஞானபீடாதிபத்தியத்தை ஸ்ரீ ஆனந்தபரவசருக்கு அளித்துத் தாம் சிவசமாதி கூடினார்கள். அதி தீவிரபக்குவியாகிய ஆனந்தபரவசர், தமது குருமூர்த்திகள் கோயிலின் மேல்பால் எழுந்தருளியிருந்து குருமூர்த்திகளின் விமானத் தூபியைத் தரிசித்தவாறே ஜீவசமாதி கூடினார்கள். அடியார்களின் முறையீட்டைக் கேட்ட ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஸ்ரீ ஆனந்தபரவசரது அதீதநிலையைக் கண்டு சமாதியினின்றும் எழுந்துவந்து ஸ்ரீ சச்சிதானந்தரைப் பீடத்தில் இருத்தி, மீளச் சிவ சமாதியில் அமர்ந்தது அதியற்புதச் செயலாகும். அவர்களது வழித்தோன்றல்களாய்ப் பீடாதிபத்தியம் பெற்று விளங்கிய மகாசந்நிதானங்களிடத்திலும் விளங்கிய அற்புதங்கள் பல. இவ்வாறு தருமை ஆதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் முதலாக இன்றுகாறும் 26 குருமகாசந்நிதானங்களின் வழி சிவஞான ஒளியைப் பரப்பி வருகின்றது.

ஞானாசாரியர்களாக விளங்கிய ஆதீன குருமூர்த்திகள் பரிபூரணமானபின் அவர்கள் திருமேனிகளைச் சமாதி செய்து ஆலயங்கள் எடுத்துச் சிவலிங்கப்பிரதிட்டையுடன் வழிபடுதல் சாத்திரமரபாகும். அவ்வகையில் முதல் குருமூர்த்திகளாகிய ஸ்ரீ குருஞானசம்பந்தர்

ஜீவசமாதி கூடிய இடம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலயமாக அருட்பொலிவுடன் திகழ்ந்து வருகிறது. ஏனைய குருமூர்த்திகளில் 2, 19, 24, 25 ஆவது குருமகாசந்நிதானங்களின் குருமூர்த்தங்கள் தருமபுரம் மேலவீதியின் மேல்பால் உள்ள ஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவிலும், 6, 8, 16, 17, 18, ஆவது குருமகாசந்நிதானங்களின் குருமூர்த்தங்கள் முறையே திருநெல்வேலி, திருக்கோட்டூர், சிவசைலம், திருபுவனம், திருப்பனந்தாள் ஆகிய தலங்களிலும் அருள் வழங்கும் ஆலயங்களாக விளங்குகின்றன.

தருமை ஆதீனம் திருமஞ்சனவீதியில் ஸ்ரீசச்சிதானந்தவிநாயகர் கோயிலை அடுத்துள்ள வில்வவனத்தில் 15 குருமகாசந்நிதானங்களின் குருமூர்த்தக் கோயில்கள் அருட்பொலிவோடு திகழ்கின்றன. இங்குள்ள ஸ்ரீ சச்சிதானந்த விநாயகர் மிக்கவரதர். இவர் கோயில் கி.பி. 1816இல் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்ததிபர் ஸ்ரீ காசிவாசி சடையப்பத் தம்பிரான் சுவாமிகளால் கட்டப்பட்டது. இங்குள்ள குருமூர்த்தங்கள் 15இல் 3ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகள் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் சமாதியினின்று மீண்டும் எழுந்து வந்து ஞானோபதேசம் செய்து ஆசாரியராகப் பீடத்தில் அமர்த்தப் பெற்றவர்கள். 4 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகள் ஸ்ரீ குமரகுருபர முனிவரை ஆட்கொண்டருளியவர்கள். 5 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக சுவாமிகள் தென்தமிழ்நாட்டில் ஏற்பட்ட பெருவெள்ளத்தைத் தம் தவவலியால் தடுத்து நிறுத்தியவர்கள். 7 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீ திருவம்பல தேசிக சுவாமிகள் ஸ்ரீ குருஞானசம்பந்தருக்கு ஆலயம் கண்டவர்கள். வருணாசிரம சந்திரிகை அருளியவர்கள். 9 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீ திருநாவுக்கரசு தேசிக சுவாமிகள் சித்தாந்தநிச்சயம் அருளியவர்கள். 10 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் முதன் முதல் காசியாத்திரை புரிந்தவர்கள். திருவருட்பா என்ற பெயரில் நூல்பல அருளியவர்கள். 11ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீசச்சிதானந்த தேசிக சுவாமிகள் நஞ்சுகந்த பாலை அமுதாக மாற்றி உண்டு வாழ்ந்தவர்கள். 12 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீ முத்துக்குமார தேசிக சுவாமிகள் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலுக்குக் குடமுழுக்குச் செய்வித்தவர்கள். 13 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக சுவாமிகள் ஸ்ரீ சிதம்பரநாதத் தம்பிரான் முதலிய அடியவர்களை உருவாக்கி, சிவஞானக்கல்வி போதித்தவர்கள். 14 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீ கந்தப்ப தேசிக சுவாமிகள் திருநெல்வேலியில் இறைவனை வேண்டிப் பாடி மழை வருவித்தவர்கள். கங்கையை விருத்தாசலத் தம்பிரான் மூலம் கொண்டுவரச் செய்து நீராடியவர்கள். 15 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீ மாசிலாமணி

தேசிக சுவாமிகள் சாரங்கி மீட்டி மழை பெய்வித்தவர்கள். காசிக் கங்கைநீர்கொண்டுவந்து தொட்டிக்கட்டில் நிரப்பி, தம்குருநாதரை அதில் புனித நீராட்டச் செய்தவர்கள். 20 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீ சிவஞானதேசிக சுவாமிகள் ஆதீனத்தையும் ஆலயங்களையும் பேணிக்காத்தவர்கள். 21 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகள் ஆதீன நிலபுலன்களையும்வருவாயையும் பெருக்கியவர்கள். 22 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீ மாணிக்கவாசக தேசிக சுவாமிகள் மாயூரத்தில் சைவசித்தாந்த மாநாடு நடத்தியவர்கள் 23 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் ஆதீன இன்றைய ஆட்சி அமைப்பிற்கு அடித்தளம் இட்டதுடன் அறிஞர்கள் பலரைக் கொண்டு சைவத்தையும் தமிழ்மொழியையும் வளர்த்தருளியவர்கள்.

இத்தகைய சிறப்பு மிக்க குருமூர்த்திகளின் ஆலயங்களில் 4 ஆவது குருமூர்த்திகள் ஆலயம் 24 ஆவது குருமகாசந்நிதானத்தின் அருளாட்சியிலும், ஏனைய ஆலயங்களிற் பல 25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் அருளாட்சிக் காலத்திலும் எடுத்துக் கட்டப் பெற்றவை. 13, 14, 15, 22 ஆவது குருமூர்த்தங்கள் நிலைமட்டம் வரை 25 ஆவது குருமூர்த்திகளின் அருளாட்சியிலும், விமானங்கள் கட்டி குடமுழுக்காட்டியது 26 ஆவது குருமூர்த்திகளின் ஆட்சியிலும் நிறைவேறின. 20, 21 ஆவது குருமூர்த்திகளின் ஆலயங்கள் 26 ஆவது தருமகாசந்நிதானத்தின் அருளாணையின்படி இப்போது எடுத்துக்கட்டப்பட்டுள்ளன. இதுபோது

திருக்கயிலாயபரம்பரைத் தருமை ஆதீனம்
இருபத்தாறுவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300 ஆவது ஆண்டு நினைவாக

வடக்குக் குருமூர்த்தத்திலுள்ள ஸ்ரீ சச்சிதானந்த விநாயகர் உள்ளிட்ட அனைத்துக் குருமூர்த்தக்கோயில்களையும் பழுதுபார்த்துத் திருப்பணிகள் செய்வித்தும், வடக்குப்பகுதி மேற்குப் பகுதியில் சிலமாயிருந்த திருமதிலை அகற்றிப் புதிதாக எடுப்பித்தும், 4 ஆவது குருமூர்த்திகள் சந்நிதியிலும் 5 ஆவது குருமூர்த்திகள் சந்நிதியிலும் நாகத்தகடு கூறைவேய்ந்த கொட்டகை அமைத்தும், சச்சிதானந்த விநாயகர் கோயிலின் முன்மண்டபத்தின் மேல்பகுதியில் கர்ண கூடுகளுடன் கூடிய சிறு கோபுரசாலையும், விநாயகர் முதலிய

சுதைச்சிற்பங்கள் அமைத்துத் திருப்பணிகள் செய்தும், மூர்த்திகட்கு அஷ்டபந்தனம் சார்த்தியும், 20, 21 ஆவது குருமூர்த்திகளுக்கு ஆலயங்கள் புதிதாக எடுப்பித்துச் சிவலிங்கப் பிரதிட்டை செய்தும், நிகழும் விபவஸு தைமீ" 16உ (29—1—89) ஞாயிற்றுக் கிழமை சப்தமி திதி சுவாதி நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதிநாழிகை 8-34 க்குமேல் 11 க்குள் மீன லக்னத்தில் காலை 10-10 மணிக்குமேல் 11-04 மணிக்குள் மகாகும்பாபிஷேகம் செய்விக்கின்றார்கள். 26—1—89 வியாழக்கிழமை மாலை தொடங்கி யாககால பூஜைகள் வேதசிவாகம முறைப்படி, வேதசிவாகம திருமுறைப் பாராயணங்களுடன் நிகழவுள்ளன. திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடும் சிறப்புற நடைபெற இருக்கின்றது.

அன்பர்கள் அனைத்து நிகழ்ச்சிகளிலும் பங்குகொண்டும், சொற்பொழிவுகளைக் கேட்டும், மகாகும்பாபிஷேக விழாக் காட்சிகளைத் தரிசித்தும் திருவருளாகிய குருவருளைப்பெற்று இன்புறுவார்களாக.

குருவே சிவம்

குருவே சிவமெனக் கூறினன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்;
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்;
குருவே உரையுணர் வற்றதோர் கோவே.

குருவருள்

தெளிவு குருவின் திருமேனி காண்டல்;
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்;
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்;
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே.

திருமரபு நீடூழி தழைக

கயிலாய பரம்பரையிற் சிவஞான
சித்திநெறி காட்டும் வெண்ணை
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானுவாகிக்
குயிலாரும் பொழில்தருமை வாழ்ஞான
சம்பந்தக் குரவன் மேலாம்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

விபவ ஆண்டு தைத் திங்கள்

தமிழ்த் தேதி	ஆங்கிலத் தேதி	கிழமை	விபரம்
10	23-1-89	திங்கள்	மக நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் இரவு மணி 9-40 க்குமேல் 10-10 க்குள் கன்னியா லக்னத்தில் யஜமான அனுக்ஞை, தேவ அனுக்ஞை, விக்னேசுவர பூஜை.
11	24-1-89	செவ்வாய்	உதயாதி நாழிகை 5க்குமேல் - (காலை 8-40 மணிக்குமேல்) கணபதிஹோமம், மாலை 5-15 மணிக்குமேல் வாஸ்துசாந்தி.
12	25-1-89	புதன்	உதயாதி நாழிகை 7½ க்குமேல் - (காலை 9-40 மணிக்குமேல்) நவக்கிரஹ ஹோமம், மாலை 5 மணிக்கு மிருத்சங்கிரஹணம்; இரவு 7 மணிக்கு அங்குரார்ப்பணம்; ரக்ஷாபந்தனம்.
13	26-1-89	வியாழன்	உதயாதி நாழிகை 5க்குமேல் - (காலை 8-40 மணிக்குமேல்) யாகசாலை அலங்காரம், மாலை 3-40 மணிக்கு கும்பாலங்காரம் (4-55 க்குமேல் 6-35 மணிக்குள்) கடக லக்னத்தில் கலாகர்ஷணம் யாகசாலா பிரவேசம் இரவு 7 மணிக்கு யாகபூஜை ஆரம்பம் 10 மணிக்கு பூர்ணாகுதி தீபாராதனை.
14	27-1-89	வெள்ளி	காலை 7-30 மணிக்கு இரண்டாவது கால யாகபூஜை ஆரம்பம் 11 மணிக்குபூர்ணாகுதி தீபாராதனை, மாலை 6 மணிக்கு யாகபூஜை மூன்றாவது காலம் ஆரம்பம், இரவு 9 மணிக்கு பூர்ணாகுதி தீபாராதனை.
15	28-1-89	சனி	காலை 7-30 மணிக்கு நான்காவது கால யாகபூஜை ஆரம்பம், 11 மணிக்கு பூர்ணாகுதி தீபாராதனை, மாலை 6 மணிக்கு ஐந்தாவது கால யாகபூஜை ஆரம்பம், 9 மணிக்கு பூர்ணாகுதி தீபாராதனை இரவு 10-க்கு பிம்பசுத்தி மூர்த்திகள் ரக்ஷாபந்தனம்.
16	29-1-89	ஞாயிறு	விடியற்காலை 5 மணிக்கு ஆறாவது கால யாகபூஜை ஆரம்பம், 8-10க்குமேல் 8-40 மணிக்குள் ஸ்பர்சாகுதி 8-45 மஹா பூர்ணாகுதி, 9-00 யாத்ராதானம்; கிரகப்ரீதி 9-15க்கு கடம்புறப்பாடு 8¾ நாழிகைக்குமேல் 11 நாழிகைக்குள் மீன லக்னத்தில் (காலை 10-15க்கு) விமானங்கள் கும்பாபிஷேகம் 10-30 க்கு ஸ்ரீ சச்சிதானந்த விநாயகருக்கு மகாகும்பாபிஷேகம்; 11-00 மணிக்குள் குருமூர்த்தங்கள் மகா கும்பாபிஷேகம், மாலை 4 மணிக்கு மகாபிஷேகம்.

உ

குருபாதம்

ஸ்ரீ குமரகுருபரர் 300 ஆவது ஆண்டு நினைவாக

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

அழைப்பிதழ்

அன்புடையீர் !

திருக்கயிலாய பரம்பரை, தருமை ஆதீனம் திருமஞ்சன வீதியில் எழுந்தருளியுள்ள அருள்மிகு சச்சிதானந்த விநாயகர் திருக்கோயில், மற்றும் அதைச்சார்ந்த வடக்குக் குருமூர்த்தத்தில் அமைந்துள்ள பதினைந்து குருமூர்த்த ஆலயங்களின் குடமுழுக்கப் பெருவிழா ஸ்ரீ குமரகுருபரர் 300 ஆவது ஆண்டு நினைவாக 1989 ஜனவரி 29 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10-10 மணிக்கு மேல் 11-04 மணிக்குள் சிறப்பாக நடைபெறவுள்ளது.

தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

திருவுளப்பாங்கின்வண்ணம், குடமுழுக்குப் பெருவிழாவை ஒட்டி, 1989 ஜனவரி 27, 28, 29 வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று நாள்களும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அரங்கில் திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு, பல்வேறு அங்கங்களுடன் மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.

குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம், காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்களும், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளும், சைவ சித்தாந்த அறிஞர்களும், தமிழ்ப் பேராசிரியர்களும், திருமுறை இசைவாணர்களும் பங்கேற்கவுள்ளனர்.

மாநாடு நிகழ்ச்சி நிரலிற் காணும் வண்ணம் மிகச் சிறப்பாக நிகழும். சைவப் பேரன்பர்கள் பங்கேற்றுத் திருவருளும் குருவருளும் பெற்று உய்வார்களாக.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின்
உத்தரவுப்படி,

வித்துவான். சுவாமிநாதத் தம்பிரான்.

முதல் திருநாள்

ஆதீன அருள்வரலாற்றுத் திருநாள்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அரங்கம்

27—1—89 வெள்ளிக்கிழமை] [மாலை 5-00 மணி

திருமுறை இசையரங்கம்

திரு. T. M. விசுவலிங்கம், திருவாவடுதுறை.
திரு. T. M. சபாபதி, திருவாவடுதுறை. } குழுவினர்

வரவேற்புரை :

வித்துவான் ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்

தொடக்கவுரை :

திருவண்ணாமலை ஆதீனம் குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள்

(தவத்திரு. குன்றக்குடி அடிகளார்.)

சிறப்புரை : செந்தமிழ்ச்செல்வர்

டாக்டர் திரு. எம். வி. ஜயராமன், எம். ஏ., டி. லிட்.,
பெங்களூர்.

விரிவுரைகள் :

டாக்டர் திரு. சு. சுவாமிஐயா, எம். ஏ., பிஎச். டி.,
சிதம்பரம்.
— அகப்புறச்சந்தானங்கள்

டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி,
எம். ஏ., பி. எட்., பி. எச்டி.,
தருமபுரம்.
— அருள்நமசிவாயர் முதல் கமலை ஞானப்பிரகாசர் வரை

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ.,
தருமபுரம்.
— தருமையாதீனக் குருபரம்பரை

திருமதி. மீராகிருஷ்ணமூர்த்தி, எம். ஏ., எம். ஃபில்.,
தருமபுரம்.
— திருவாரூர் நான்மணி மாலை

இரவு 9-00 மணி **பூர்ணாகுதி, யாகசாலை தீபாராதனை.**

இரவு 9-30 மணி **"ஒரு வரலாறு வானைத் தொடுகிறது"**

(ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின் வரலாற்று நாடகம்)

சீகாழி ஸ்ரீ சபாநாயக முதலியார் இந்து மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவியர்

இரண்டாம் திருநாள்

பண்டார சாத்திரத் திருநாள்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அரங்கம்

28—1—89 சனிக்கிழமை] [மாலை 5-00 மணி

திருமுறை இசையரங்கம்

திரு. எஸ். முத்துக்கந்தசாமி, திருச்சி.
திரு. எஸ். நடராஜ குருக்கள், திருக்கடவூர். } குழுவினர்

வரவேற்புரை :

வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

தொடக்கவுரை :

கயிலை மாமுனிவர்

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து அதிபர்.

சிறப்புரை :

டாக்டர். திரு. எம். எஸ். உதயமூர்த்தி

மக்கள் இயக்கம் அமைப்பாளர், சென்னை.

விரிவுரைகள் :

சிரோமணி திரு. வி. கணேசன்

திருவையாறு.

— வருணசிரமசந்திரிகை (வடமொழி)

7 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீ திருவம்பலதேசிக சுவாமிகள் அருளியது

வித்துவான் திரு. தா. ம. வெள்ளைவாரணம்

திருப்பனந்தாள்.

— சமாதிலிங்கப் பிரதிட்டாவிதி

7 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீ திருவம்பலதேசிக சுவாமிகள் அருளியது

டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி, எம். ஏ., பி. எச்டி.,

தருமபுரம்

— சித்தாந்த நிச்சயம்

9 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீ திருநாவுக்கரசு தேசிக சுவாமிகள் அருளியது

வித்துவான் திருமதி ப. நீலா, எம். ஏ., எம். ஃபில்.,

— திருவருட்பா

10ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீசிவஞானதேசிகசுவாமிகள் அருளியது

திரு. சா. கிருட்டிணமூர்த்தி, எம். ஏ,

— சிதம்பர மும்மணிக்கோவை

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளியது

இரவு 9-00 மணி பூர்ணாகுதி, யாகசாலை தீபாராதனை.

இரவு 9-30 மணி இன்னிசை விரிவுரை

திருமதி கௌரி இராஜகோபாலன் குழுவினர், சென்னை.

" விநாயகர் பெருமை "

கும்பாபிஷேகத் திருநாள்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அரங்கம்

29—1—89 ஞாயிற்றுக்கிழமை] [பகல் 11-15 மணி

மகாகும்பாபிஷேக நிறைவில்

திருக்கயிலாய பரம்பரையில், தருமபுர ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள்

பக்தர்களிடையே அருளுரை வழங்கி ஆசீர்வதிப்பார்கள்.

விழா மலர் :

1. "சித்தாந்த நிச்சயம்"

(தருமை ஆதீனம் 9 ஆவது குருமூர்த்திகள்

ஸ்ரீ திருநாவுக்கரசு தேசிக சுவாமிகள் அருளியது)

2. "தருமைக் குருமணிகளின் அருள் வரலாறு"

மூன்றும் திருநாள்

ஆதீன அடியவர் அருள்நூல் விளக்கத் திருநாள்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அரங்கம்

29—1—89 ஞாயிற்றுக்கிழமை] [மாலை 4-25 மணி

திருமுறை இசையரங்கம்

திரு. எஸ். திருஞானசம்பந்தன், சீகாழி. } குழுவினர்
திரு. எஸ். சுவாமிநாதன், திருத்தணி. }

வரவேற்புரை :

ஸ்ரீமத். கந்தசாமித் தம்பிரான் சுவாமிகள்

தொடக்கவுரை :

காஞ்சிபுரம், தொண்டைமண்டல ஆதீனம் குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

சிறப்புரை :

திரு. டி. என். இராமச்சந்திரன், பி. ஏ., பி. எல்.,
கௌரவ இயக்குநர்,
அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம், தருமபுரம்.

விரிவுரைகள் :

ஸ்ரீ மத். குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்
திருப்பனந்தாள்.
— பண்டாரமும்மணிக்கோவை
(4ஆவது குருமூர்த்திகள்மீது ஸ்ரீ குமரகுருபரர் பாடியது)

டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன், எம். ஏ., பிஎச். டி.,
— சிவானந்தபோதசாரம்
(ஸ்ரீ சிவானந்தமுனிவர் பாடியது)

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், எம். ஏ., பி. எட்.,
— நித்திய கன்மநெறி
(ஸ்ரீ சிதம்பரநாத முனிவர் பாடியது)

டாக்டர் திரு. மு. சிவச்சந்திரன், எம். ஏ., பி. எட்.,பிஎச். டி.,
— நடராஜ சதகம்
(ஸ்ரீ சிதம்பரநாதமுனிவர் பாடியது)

இரவு 9-30 மணி வில்லுப்பாட்டு

" ஸ்ரீ குருஞானசம்பந்தர் "
திரு. தருமை சிவா, & குழுவினர்.

வேதசிவாகம பன்னிருதிருமுறை அகண்ட பாராயணம்
1989, ஜனவரி, 26, 27, 28, 29
வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு
ஆகியநான்கு நாள்களும் தொடர்ந்து நடைபெறும்.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

சக்திரதத்தில் எழுந்தருளிய சமயபுரம் ஸ்ரீ மாரியம்மனுக்கு தருமபுரத்தில் அபிஷேக ஆராதனை நடைபெற்றபோது

வழங்கியருளிய

ஆசியுரை

4—12—88

சக்திரதம் :

விஸ்வஹிந்து பரிஷத் இயக்கமானது பாரததேசம் முழுதும் பரவி இருக்கிற இயக்கம். இந்த இயக்கத்தின் மூலம் சமயபுரம் மாரியம்மனை இந்த உற்சவ விக்ரகத்திலே ஆவாகனம் செய்து, தமிழ்நாடு முழுவதும், எல்லாமக்களும் அபிஷேக ஆராதனை செய்ய வேண்டுமென்பதற்காக ஊர்வலமாகக் கொண்டு வருகின்றார்கள். எல்லோரும் அபிஷேக ஆராதனை செய்ய வேண்டும், என்பது விஸ்வ ஹிந்து பரிஷத்தின் முக்கிய நோக்கமாகும். ஹிந்துக்கள் அனைவரும் ஒன்றுபட்டு, சாதி வேற்றுமை இல்லாமல் ஹிந்துக்களாகவே வாழ்வதற்குக் கற்றுக்கொள்ளவேண்டும் என்பதை நடைமுறைப்படுத்திக் காட்டவே இச்சக்திரத வழிபாடு ஊர்கள் தோறும் நடத்தப்பட்டு வருகிறது.

ஏமாற்றாதே! ஏமாறாதே!

உலகிலுள்ள மதங்களின் நிலையைப் பற்றி மக்கள் தெரிந்து கொள்ளவேண்டும். இந்தியாவின் வடக்குப் பகுதியில் இஸ்லாமியர்களும், தெற்குப் பகுதியில் கிருஸ்தவர்களும், அவர்களது மதத்தை வளர்க்கிற நோக்கத்தில் மதம் மாற்றி வருகின்றார்கள். பொன்னுக்கும், பொருளுக்கும், பெண்ணுக்கும் அடிமை ஆகி நம் தத்துவத்தை உணராத இந்துக்கள் பலர் மதம் மாறுகின்றனர். "நாமும் ஏமாந்து வருகின்றோம். நாம் ஏமாற்றவும் கூடாது; ஏமாறவும் கூடாது."

விதிமாற்றம் ஏன்?

இந்துக்களுக்கென்று இருப்பது இந்தியா ஒரு நாடுதான். நேபாளம் என்ற சிறிய நாடு ஒன்றும் இருக்கின்றது. இந்த இந்திய நாட்டை மதச்சார்பில்லாத அரசாங்கம் ஆள்வதைப் பயன் படுத்திக் கிருஸ்தவர்களும், முஸ்லீம்களும் நம் நாட்டைப் பங்கு போட்டுக்கொண்டு வருகின்றனர்கள். இந்தநிலையில் இந்துக்களாகிய நாம் உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்ற வித்தியாசம் பார்க்காமல் நம்முடைய கலாசாரத்திலே சொல்லப்பட்டிருக்கின்ற பொதுவான விஷயங்களை- ஆசார அனுஷ்டானங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். அந்த அடிப்படையிலேதான் ஜாதி வித்தியாசம் இல்லாமல் எல்லோரும் அபிஷேகம் செய்யவேண்டுமென்பதற்காக விஸ்வ ஹிந்து பரிஷத் சமயபுரம் மாரியம்மனைத் தமிழகமெங்கும் பவனியாகக் கொண்டு வந்துள்ளது. அவ்வாறு கொண்டு வருவதற்கு ஆகம விதிமுறைகள் இடம் கொடுக்கவில்லை என்றாலும் விதிமுறைகளை எல்லாம் ஓரளவு தளர்த்திதான் இந்த ரதம் உயரிய நோக்கத்துடன் இந்த மாரியம்மனை வைத்துப் பவனி வருகின்றது.

மாரியம்மை :

மாரி என்றால் குளிர்ச்சி என்பது பொருள். முற்காலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் யுத்தம்வந்து, அசுரர்கள்தோற்றுத் தேவர்கள் வெற்றிபெற்றனர். தோற்ற அசுரர்கள் அவர் களுடைய குருவாகிய ஸ்ரீ சுக்ராசாரியாரிடம் முறையிட்டார்கள். தேவர்களுடைய குரு வியாழபகவான் (பிருகஸ்பதி.) அசுரர்கள் எதிர்மறையான, அதர்வண வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்ற ஆபிசார ஹோமத்தைச் செய்து அதன் மூலமாகக் கொடுமையான வெப்பவியாதிகளை உருவாக்கினார்கள். இப்பொழுது அணுசக்திகள் மூலம் உருவாகும் வியாதிகள் போல, அதிலே அதிக வெப்பம் தாளாமல் உடம்பெல்லாம் கொப்பளித்தது; தேவர்கள் சிரமப் பட்டார்கள். சிவபெருமானை வழிபட்டுப் பிரார்த்தித்தார்கள். பெருமான் தனது ஜடாபாரத்தில் உள்ள கங்கையை எடுத்து ஒரு துளி விடுத்தார், அக்கங்கையின் ஒரு துளியே மாரியம்மையாக உருவெடுத்து, அந்த வெப்ப நிலையையும், கொப்பளத்தையும் தணியச் செய்தது.

வைரஸ் என்ற வியாதிக்கு மருந்துகள் – சமீபகாலம் வரை மருத்துவத்துறையில் பரிகாரம் கண்டுபிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அரிஜனமா? சாம்பவ வகுப்பா?

அத்தகைய சக்தி மிக்க மாரியம்மன் நமக்கெல்லாம் அருள் பாலிக்க வந்திருக்கின்றாள். இந்த அன்னை வந்ததின் மூலமாக இந்த நாடு செழிக்கவேண்டும். மாரியம்மனுக்குக் கரகம் எடுத்தால் மழை பெய்யும் என்ற நிலையை இன்றும் பார்க்கிறோம். காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் இதற்காகத் தான் ஜனகல்யாண், ஜனஜாக்ரண் போன்ற இயக்கங்கள் ஆரம்பித்திருக்கின்றார்கள். ஜாக்ரன் என்றால் விழிப்பு நிலை என்பது பொருள். அந்த விழிப்பு நிலையிலிருந்து நாம் செயல்படவேண்டும். சில சலுகைகளைக் கருதி ஹரிஜனங்கள் மதம் மாறுகின்றார்கள். உண்மையில் ஹரிஜனங்கள் என்று அவர்களைச் சொல்லக் கூடாது. சாம்பவகுலம் எனச் சொல்லவேண்டும். சம்பு என்கிற சிவனின் வம்சாவளிகள்; அவர் வழித்தோன்றல்கள், அவர்கள் அந்த குலத்தினுடைய பெருமையை அறிந்து, உயர்ந்த நிலை அடைய வேண்டும். அதற்குத்தான் விஸ்வ ஹிந்து பரிஷத் பாடுபடுகின்றது.

எல்லா மதத்திலும் தாழ்ந்தோா உண்டு' :

அரசு அவர்களுக்குக் கொடுக்கின்ற சலுகைகளை வைத்து அவர்கள் நல்ல நிலைக்கு வருவார்கள் என எதிர்பார்த்தால் அவர்களில் பெரும்பாலோர் சலுகைகளை நன்முறையில் பயன் படுத்தாமல் வளர்ச்சி இல்லாமல் தாழ்ந்து போகிறார்கள். அவர்கள் மட்டுமல்ல மேல்நிலையில் உள்ளவர்களும் அப்படித்தான் உள்ளார்கள். கிருஸ்தவர்களிலும் மிகத் தாழ்ந்தவர்களும் இருக்கின்றார்கள். சாதாரண நிலையில் இருக்கின்றவர்கள் இருக்கின்றார்கள். முஸ்லீம்களிலும் பாய்பின்னி வியாபாரம் செய்தல், குடை, பூட்டு, ரிப்பேர் செய்கின்றவர்களும் ஏழைகளும் இருக்கின்றார்கள்.

உழைப்பே உயர்வு தரும் :

எந்த மதத்துக்குப்போனாலும் உழைக்காமல் உண்ண முடியாது. உழைப்பே உயர்வுதரும். மதம் மாறுவதால் யாரும் உயர்வதில்லை. உயர்வு தாழ்வு நீங்கவுமில்லை. எனவே நம்மிடையே அவர்கள் மதம் மாற்ற வந்தாலும் நாம் விழிப்பு நிலையிலே இருந்து அதைத் தடுக்கவேண்டும். நாம் மதமாற்றம் செய்வதில்லை. ஆனால் நம்மவர்களை மதம் மாற்ற பிறர் முயற்சித்தால் அதற்கு இடந்தரக் கூடாது. நாம் எப்போதும் எல்லா மதத்தினரிடமும் ஒற்றுமையுடன் பழகுவோம். யாரிடமும் நாம் வீண்சண்டை போடுவதில்லை. இந்தப் பகுதியிலும் மதம் மாற்றங்கள் இருந்தன. இப்போது அடங்கி இருக்கின்றது. பக்தி நிலை ஒன்றிலேதான் எல்லோரையும் ஒன்று

திரட்டி நல்ல மனநிலையை உருவாக்கி ஒருமைப்பாட்டை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையில் விஸ்வ ஹிந்து பரிஷத் செயல்படுகின்றது.

விஸ்வ ஹிந்து பரிஷத்தின் நிகழ்ச்சிகளில் நாமும் அவ்வப்போது கலந்துகொள்கின்ேறாம். பிரசாரங்கள் இன்னும் அதிகமான அளவிலே செய்யவேண்டும் என்பதே நமது விருப்பம். நாமும் நம்முடைய தெய்வங்கள் மேல் நம்பிக்கை வைத்துக் கோவிலுக்கு வந்தால் அங்கே இங்கே என்று மனதைசெலுத்தாமல் முழுமையான பக்தியுடன் வணங்கி இறைவன் அருளைப் பெறவேண்டும். இதே அடிப்படையில், திருமடத்தைச் சேர்ந்த ஞானபுரீசர், தர்மபுரீசர், துர்க்கை ஆலயங்களில் வாரவழிபாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எல்லோரும் கலந்து கொள்கிறார்கள். அதிலேயும் எல்லோரும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். எல்லோரும் இந்த அன்னையினுடைய அருள் பெற்று நலமாக வாழவேண்டும்.

வாழ்த்து :

விஸ்வ ஹிந்து பரிஷத் மூலம், இந்த சக்திரதத்தோடு மட்டுமல்லாது முதலில் பழனி முருகனை வைத்து "ஞானரதம்" என்ற பெயரில் இதுபோலக் கிராமம் கிராமமாக எழுந்தருளச் செய்து எல்லோர்க்கும் அபிஷேகம் செய்யும் வாய்ப்புத் தந்தது. இதுபோன்ற பணிகள் பாராட்டத் தகுந்தது. எல்லோரும் அவரவர் மதத்தில் நின்றே அவரவர் தெய்வங்களை வழிபட்டு அருள்பெற்று உய்யவேணுமாய் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கர் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

கடிதம்

A. அற்புதம் மணிமுத்தாறு,
வின்சென்ட்பண்ணை 10—1—89.

மகாபக்திக்குரிய ஸ்ரீலஸ்ரீ பரமாசாரிய சுவாமிகளைத் தாழப் பணிந்து எழுதுவது. (23—11—88) அன்று கார்த்திகைத்திருநாளில் வழங்கியருளிய ஆசியுரையில் "......கல்விச் செறுக்காலோ, செல்வச் செறுக்காலோ இறைவனைக் காண இயலாது......" "அன்பெனும் வலையில் அகப்படும் மலையே" (இராமலிங்க அடிகள்) "பக்தி வலையிற் படுவோன் காண்க" (மணிவாசகர்) என்னும் கருத்துக்கள் எனது உள்ளத்தை வெகுவாகத் தொட்டன. மேற்படி இரண்டு கருவிகளையும் மேலும் மேலும் உபயோகித்து இறைவனை அன்பு செய்யவும், மற்றவர்களையும் இந்த வழியில் வழி நடத்தவும் உதவியாயிருக்கும் என்பதையும் தாழ்மையாய்த் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீ காசியில், மூன்றுவது அனைத்துலக

சைவ சித்தாந்தக் கருத்தரங்கம்

(1988 டிசம்பர் 8, 9, 10)

டாக்டர். திரு. இரா. செல்வக்கணபதி,
எம். ஏ. பி. எட்., பிஎச். டி.,
தருமபுரம்

குருவருளும் திருவருளும்:

குருவருளும் திருவருளும் துணைநிற்க, தருமை ஆதீனம் அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின், மூன்றுவது அனைத்துல சைவசித்தாந்தக் கருத்தரங்கம் ஸ்ரீ காசியில் 1988 டிசம்பர் 8,9, 10 வியாழன், வெள்ளி, சனி ஆகிய மூன்று நாள்களும் மிகச் சிறப்பாகநடந்தேறியது. தருமை ஆதீனம் 26 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருவுளப்பாங்கின் வண்ணம், இக்கருத்தரங்கம், தருமை ஆதீனத் திருக்கூட்டத்து அடியவருள் ஒருவரும், வாரணசியில் ஸ்ரீ காசி குமாரசாமித் திருமடம கண்டவருமாகிய ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின் 300 ஆவது ஆண்டு நினைவாக வாரணசியில் நிகழ்த்தப் பெற்றது.

பங்கேற்ற நிறுவனங்கள்:

தருமை ஆதீனம் அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம், இம்மூன்றுவது சைவசித்தாந்தக் கருத்தரங்கினை, ஸ்ரீ காசி குமாரசாமித் திருமடம், திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக்கழகம், வாரணசி பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகம், வாரணசி ஸ்ரீ சம்பூர்ணனந்த் சமஸ்கிருதப் பல்கலைக்கழகம், வாரணசி ஸ்ரீ வித்யாபீடம் இந்திப் பல்கலைக்கழகம் முதலிய சமய, கல்வி நிறுவனங்களோடு ஒருங்கிணைந்து மிகச்சிறப்பாக நிகழ்த்தியது. தென்னிந்திய, வடஇந்தியப் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், சமய நிறுவனங்கள் தங்கள் சார்பில் சைவசித்தாந்த அறிஞர்கள் முப்பதின்மரை இக்கருத்தரங்கில் பங்கேற்க ஏற்பாடு செய்திருந்தன. நாடெங்கிருந்தும் பார்வையாளராக ஏறத்தாழ நாற்பது பேரரளர்களும் கருத்தரங்கில் பங்கேற்றனர்.

சென்னையில் புறப்பாடு:

சென்னை, தியாகராய நகர், வடக்கு உஸ்மான்சாலை, தருமை ஆதீன சமயப் பிரசார நிலையத்தில், கட்டுரையாளர்களும், பார்வையாளர்களும் ஒருங்கிணைந்து வழிபாடு செய்தனர். பின்னர் 5—12—1988 மாலை 5-30 மணிக்குச் சென்னை சென்ட்ரல் நிலையத்திலிருந்து, வாரணசி விரைவு வண்டியில் அனைவரும் பயணம் மேற்கொண்டு 7—12—1988 புதன் காலை 7-00 மணி அளவில் அலகாபாத் சென்றடைந்தனர். ஸ்ரீ காசி குமாரசாமி மடத்து நிர்வாகிகளும், பணியாளர்களும் அனைவரையும் அலகாபாத் நிலையத்தில் வரவேற்றனர். ஸ்ரீ காசியிலிருந்து வந்திருந்த தனி சொகுசுப் பேருந்தில் ஏறி அனைவரும் காலை 8-30 மணி அளவில் யமுனை நதிக்கரை சேர்ந்தனர். தமிழ்நாட்டில் நடைபெறும் மகாமகம் போல், வடநாட்டில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கும்பமேளா நடைபெறும் கங்கை, யமுனை, சரஸ்வதி என்ற மூன்று நதிகள் கூடும் திரிவேணி சங்கமம் அலகாபாத்தில் அமைந்துள்ளது.

திரிவேணி சங்கமத்தில் புனித நீராட்டு :

மூன்று தனித்தனிப் படகுகளில் ஏறி, திருமுறைப் பாராயணத்துடன் அனைவரும் திரிவேணிசங்கமம் சென்றடைந்தனர். தமிழில் சங்கல்பம் செய்துகொண்டு, ஸ்ரீ காசி கருத்தரங்கில் பங்கேற்கும் அரியவாய்ப்புடன், திரிவேணி சங்கமப் புனித நீராடலுக்கும் ஏற்பாடுசெய்தருளிய தருமைக் குருமணியின் அருளிப்பாட்டை வியந்து போற்றியவாறு அனைவரும் புனித நீராடினர். இராமேஸ்வரத்திலிருந்து கொண்டுவரப்பட்ட புனிதமண் கங்கையில் கரைக்கப் பட்டது. மலர்தூவியும், சிவபூஜை செய்தும் வழிபாடாற்றி, புனித கங்கைநீர் சேகரித்துக்கொண்டு பகல் 11-30 அளவில் யமுனைக் கரை மீண்டு ஸ்ரீ காசி குமாரசாமி மடத்திலிருந்து அனுப்பப் பெற்றிருந்த நண்பகல் உணவுகொண்டு பேராளர்கள் அலகாபாத் ஆனந்தபவனம் சென்றடைந்தனர். நேருஜியின் பூர்வீக வாழ்விடத்தையும், அவர்தம் பெருமித வாழ்வையும் கண்டுகளித்த நெஞ்ச நிறைவுடன் தனிப் பேருந்தில் பயணம் மேற்கொண்டு மாலை 5-30 அளவில் ஸ்ரீ காசி குமாரசாமித் திருமடம் சேர்ந்தனர். கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளும், நிர்வாகிகளும் இனிது வரவேற்று உணவும் உறைவிடமும் வழங்கினர்.

ஸ்ரீ காசியில் சைவத் திருமுறை இசைவெள்ளம் :

தருமை ஆதீனம் அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின், மூன்றுவது கருத்தரங்கம் 8—12—88 வியாழன் காலை ஸ்ரீ காசிசம்பூர்ணானந்த சமஸ்கிருதப் பல்கலைக் கழகத்தில்

தொடங்கியது. முன்னதாகக் காலை 9-30 முதல் 10-30 வரை பக்கவாத்தியங்களுடன் திருமுறை இசையரங்கம் நடைபெற்றது. சீகாழி திரு. எஸ். திருஞானசம்பந்தன், திருத்தணி திரு. என். சுவாமிநாதன் இருவரும் திருமுறைப் பாடல்களைப் பாடினர். நாள்தோறும் திருமுறை இசையரங்கத்திற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. ஸ்ரீ காசி நகர அறிஞர்களையும், வெளிநாட்டு அன்பர்களையும், தமிழ்த் திருமுறை இசை வெகுவாக ஈர்த்தது குறிப்பிடத்தக்கது.

முதல் அமர்வு:

கருத்தரங்கின் முதல் அமர்வு காலை 10-30 மணிக்குத் தொடங்கியது. சம்பூர்ணானந்தா சமஸ்கிருதப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு. வி. வெங்கடாசலம் தலைமை ஏற்றார். மேன்மை தங்கிய ஸ்ரீ காசி மகாராஜா அவர்கள் பங்கேற்று, துணைவேந்தர் வெளியிட்ட மும்மொழியில் அமைந்த கருத்தரங்க விழா மலரைப் பெற்றுக்கொண்டார். கருத்தரங்கில் ஸ்ரீகாசி குமாரசாமித்திருமடம் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் பங்கேற்று அறிஞர்களுக்கு உருத்திராக்க மாலைகள் அணிவித்தார் கள். திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் திரு. ச. முத்துக்குமரன் வருகை புரிந்தார். துணைவேந்தர், மகாராஜா, காசிவாசி ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் ஆகியோருக்குத் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஆசிக்கவசமாகப்பொன் னாடைகள் போர்த்தப்பெற்றன. பாண்டிச்சேரி, இந்தியப்பண்பாட்டு நிறுவனம் டாக்டர் திரு. என். ஆர். பட் அனைவரையும்வரவேற்றார். துணைவேந்தர் திரு. வி. வெங்கடாசலம் தலைமைப் பேருரை நிகழ்த்தினார். சமஸ்கிருத மொழியில் நடைபெற்ற இம் முதல் அமர்வில், அமெரிக்க ஐக்கிய நாடுகளைச் சார்ந்த சமஸ்கிருத அறிஞர் பேராசிரியர் திரு. ஜார்ஜ் கார்டோனா உரையாற்றினார். சமஸ்கிருதப்பல்கலைக்கழகப்பேராசிரியர்திரு.பிரஜ்பல்லபதுவிவேதி டாக்டர் திரு. கே. டி. திரிபாதி, பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகம் டாக்டர் திரு. எஸ். பி. வியாஸ் ஆகியோர் கட்டுரை வழங்கினர். பார்வையாளர்கள் ஐயங்களுக்கும் வினாக்களுக்கும் கட்டுரையாளர் கள் உரிய விளக்கமளித்தனர்.

இரண்டாம் அமர்வு:

நண்பகல் ஸ்ரீகாசி சம்பூர்ணானந்த் சமஸ்கிருதப்பல்கலைக்கழகத் துணைவேந்தர் அனைவருக்கும் விருந்தளித்தார். பிற்பகல் 3-00 மணிக்கு இரண்டாம் அமர்வு பேராசிரியர் திரு. வி. வெங்கடாசலம் அவர்கள் தலைமையில் தொடங்கியது. ஸ்ரீ காசி ஆர்ய மகிளா பட்டக்கல்லூரி டாக்டர். செல்வி. ரமாகோஷ், தத்துவத்துறைப்

பேராசிரியர் டாக்டர் திரு. கைலாசபதி மிஸ்ரா ஆகியோர் கட்டுரை வழங்கினர். சமஸ்கிருதம் மற்றும் இந்தியில் இவ்வமர்வு அமைந்தது. சைவசித்தாந்தம், சைவதரிசனங்கள் பலவகைச் சைவம் - ஓர் ஒப்பீடு முதலிய தலைப்புக்களில் கட்டுரைகள் வழங்கப் பெற்றன.

மூன்றும் அமர்வு :

இரண்டாம் நாள் 9—12—88 வெள்ளிக்கிழமை காலை 10-30 மணிக்கு மூன்றும் அமர்வு. ஸ்ரீ காசி வித்யாபீடம் இந்திப்பல்கலைக் கழகத்தில், அப்பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்களுக்குத் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஆசிக்கவசமாகப் பொன்னுடைப் போர்த்தப்பட்டது. பேராசிரியர் வித்யா நிவாஸ் மிஸ்ரா தலைமையில் தொடங்கியது. டாக்டர். செல்வி. ரமாகோஷ் வரவேற்றார். டாக்டர். திருமதி. ரமாபாண்டே, டாக்டர். திரு. ஆர். ஆர். பாண்டே, டாக்டர். திரு. நாகேந்திரநாத் உபாத்யாயா, டாக்டர். திரு. சந்திரசேகர சிவாசாரியர் ஆகியோர் இந்திமொழியில் ஆய்வுக் கட்டுரைகள் வழங்கினர். சைவ சாத்திரங்கள் வீரசைவமும் சைவசித்தாந்தமும் முதலிய தலைப்புக்களில் கட்டுரைகள் வழங்கப்பெற்றன.

நான்காம் அமர்வு :

நான்காம் அமர்வு பிற்பகல் 3-00 மணி அளவில் ஸ்ரீ காசி பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகம் தத்துவத்துறையில் நடைபெற்றது. முன்னதாக இப்பல்கலைக்கழகத் தத்துவத்துறைத்தலைவர் டாக்டர். திரு. எல். என். சர்மாவும் அடுத்து இப்பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர். திரு. ஆர். பி. ரஸ்டோகியும் தலைமை ஏற்றனர். கேரளப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர். திரு. தம்பி உரையாற்றினார். பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணை வேந்தர் டாக்டர். திரு. ச. முத்துக்குமரன் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார். திரு. ஹேமந்த்ரநாத் சக்ரவர்த்தி, டாக்டர். திரு. பி. எஸ். சோமசுந்தரம், டாக்டர். திரு. கமலாகார்மிஸ்ரா, நிறுவன கௌரவ இயக்குனர் திரு. டி. என். இராமச்சந்திரன் முதலியோர் ஆங்கிலத்தில் கட்டுரை வழங்கினர்.

9—12—88 காலை ஸ்ரீ காசி வித்யாபீடத் துணைவேந்தர் திரு. வித்யாநிவாஸ்மிஸ்ரா அவர்கள் சிவஞானசித்தியார் சுபக்கம் (தமிழ் ஆங்கிலம், இந்தி) திருவருட்பயன் (தமிழ், ஆங்கிலம், இந்தி) நூல்களை வெளியிட டாக்டர். செல்வி ரமாகோஷ் அவர்கள் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார்கள்.

9—12—88 மாலை பனாரஸ் இந்துப்பல்கலைக்கழகத் துணை வேந்தர் திரு. ஆர். பி. ரஸ்தோகி அவர்கள் சைவசித்தாந்தம் பகுதி - 2 (ஆங்கிலம்) பதி, பசு, பாசம் (ஆங்கிலம்) நூல்களை வெளியிட டாக்டர் திரு. எல். என். சர்மா அவர்கள் முதல் பிரதியை பெற்றுக்கொண்டார்கள்.

9—12—88 மாலை பனாரஸ் இந்துப்பல்கலைக் கழகத்தில் கயிலை மாமுனிவர் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் (1) மெய்கண்டசாத்திரம் (2) தருமை ஆதீனச் செப்பேடுகள் (3) சைவசமயக்கல்வி - 3 (4) சைவசமயக்கல்வி -4 ஆகிய நூல்களை வெளியிட, திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர். ச. முத்துக்குமரன் அவர்கள் முதல் பிரதிகளைப் பெற்றுக்கொண்டார்கள்.

ஐந்தாம் அமர்வு :

மூன்றும் நாள் 10—12—88 சனிக்கிழமை காலை 10-30 மணி அளவில் ஐந்தாம் அமர்வு ஸ்ரீ காசி பனாரஸ் இந்துப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது. டாக்டர் திரு. எல். என். சர்மா தலைமை ஏற்றார். திரு. இராம்சங்கர் திரிபாதி, டாக்டர் திரு.என்.ஆர்.மார்க், டாக்டர் செல்வி ரமாகோஷ், டாக்டர் திரு. எஸ். என். கந்தசாமி, டாக்ட ர்திரு. விஜயகுமார், டாக்டர் திரு. எஸ். பி. சபாரத்தினம், திரு. ராம்நரேஷ் திரிபாதி, பேராசிரியர் திரு. எல். என். சர்மா ஆகியோர் ஆங்கிலத்தில் கட்டுரை வழங்கினர். நண்பகல் பேராளர் களுக்குத் துணைவேந்தர் விருந்தளித்தார்.

ஆறும் அமர்வு :

ஆறுவது அமர்வு 10—12—88 சனிக்கிழமை பிற்பகல் திருமுறை இசை அரங்கிற்குப் பிறகு 3-00 மணி அளவில் ஸ்ரீ காசி குமாரசாமித் திருமடத்தில் தொடங்கியது. கயிலை மாமுனிவர், காசிவாசி ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் தலைமை ஏற்றார். தமிழ் மொழியில் டாக்டர் திரு. கு.சுந்தரமூர்த்தி, பேராசிரியர் திரு. வி. சா. குருசாமி தேசிகர், டாக்டர் திரு. பி. ஆர். நரசிம்மன், டாக்டர். திரு. இரா. செல்வக்கணபதி, டாக்டர். திரு கோ. தெய்வநாயகம், டாக்டர். திரு. கங்காதரன்மற்றும் பேராளர் களும் பங்கேற்றுக் கட்டுரைகள் வழங்கினர்.

ஸ்ரீ குமரகுருபரர் 300ஆவது ஆண்டு நினைவுக் கருத்தரங்கம் :

ஏழாவது அமர்வு ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின் 300 ஆவது ஆண்டு நிறைவைச் சிறப்பிக்கும் வகையில் மாலை 7-00 மணிக்குத்

தொடங்கியது. வித்துவான் திரு. வி. சா. குருசாமிதேசிகர், டாக்டர். திரு.இரா. செல்வக்கணபதி, டாக்டர்.திரு.கு.சுந்தரமூர்த்தி,டாக்டர் திரு. வை. இரத்தினசபாபதி, டாக்டர். திரு. மா. இராமலிங்கம் முதலியோர் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகளின் சமய, தத்துவ, இலக்கியப் புலமைகளை ஆய்வுக் கட்டுரைகளாக்கி வழங்கினர். காசிவாசி ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் நிறைவுப் பேருரை வழங்கினார். இயக்குநர் திரு. டி. என். இராமச்சந்திரன் நன்றியுரை வழங்கினார்.

மூன்றுநாட்கள் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்ட கட்டுரையாளர்கள் அனைவருக்கும் தருமை ஆதீனத்தின் சார்பில் சால்வை போர்த்தப்பட்டது.

11—12—88 ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீகாசி விசுவேசர் சிறப்பு வழிபாடும், 12—12—88 திங்கள் ஸ்ரீ கேதாரநாதர் சிறப்பு வழிபாடும் நண்பகல் ஸ்ரீ காசியில் பரிபூரணம் எய்திய தருமை 25 ஆவது குரு, மூர்த்திகள் கயிலை ஸ்ரீ சுப்பிரமணி தேசிக சுவாமிகள் நினைவாகச் சாதுக்களுக்குப் பண்டாராவும் நிகழ்த்தப்பெற்றன. கருத்தரங்கக் குழுவினர் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளை வணங்கி நன்றி தெரிவித்துக் கொண்டு அன்று மாலை சென்னை புறப்பட்டனர்.

தருமைக் குருமணி அவர்களின் தவவலியால் வடபுலத்தில் சைவசித்தாந்தச் செந்நெறிக்குப் பெருமையும், மதிப்பும் உயர்ந்தன.

பார்வையாளர் குறிப்பு நகல்

தருமை ஆதீனம்

ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம், திருக்கடவூர்

என்னுடைய அறுபதாம் ஆண்டு விழா அருள்திரு திருக்கடவூர் அமிர்தகடேஸ்வரர், அபிராமி ஆலயத்தில் நடைபெற்றது. ஆலயத்தின் அழகு, அதனை அழகுற வைத்துள்ள பான்மை, பக்தர்களுக்கு ஆலயத்தார் அளிக்கும் உதவி என்னை மிகவும் கவர்ந்தது. திரு. ஞானப்பிரகாசம் அவர்கள் கண்காணிப்பாளர் பணியினை யாவரும் போற்றும் வண்ணம் செயலாற்றி வருகின்றார். அவர்தம் உழைப்பினையும் எடுத்துக் கொள்ளும் பொறுப்பினையும் நான் பெரிதும் பாராட்டுகின்றேன்.

(ஒ-ம்) பு. ரா. கோகுல கிருஷ்ணன்,
10—8—88 தலைமை நீதிபதி, குஜராத் மாநிலம்.

விஷ்ணு பக்தி

திரு. ஆர். சுப்பிரமணியன்
பாண்டிச்சேரி

(மலர் 48, இதழ் 1, பக்கம் 13 இன் தொடர்ச்சி)

காலையில் சூரியன் பிரம்மாவின் சொரூபம். நண்பகலில் நீலவண்ணத்துடன் விளங்கும் காட்சி விஷ்ணுவின் சொரூபம். மாலையில் மீண்டும் சூரியன் சிவப்பு நிறமாகிருன். எல்லாப்பிராணி களும் தத்தம் நிலையில் ஒடுங்குகின்றன. இது சம்காரம். இவர் ருத்ரன்.

ஆழ்துயிலில் உள்ள ஜீவனுக்கு "இருக்கிறேன்" (அஸ்மி) என்ற உணர்வைத்தவிர வேறுஎதுவும் தெரியாததுபோல சமஷ்டியி லும் உலகங்கள் அனைத்தும் மறைந்த பிறகு அவர் எப்படி இருக்கிருர் என்பதையும் கூறமுடியாது இது தமஸ். அறியமுடியாத தற்குத் தமஸ் என்பது வழக்கு.

" ஆஸீதிதம் தமோபூதமப்ரக்ஞா தமலக்ஷணம்।
அப்ரதர்க்ய மவிக்ஞேயம் ப்ரஸுப்தமிவ ஸர்வத :॥ "

இந்த உலகம் இருளாகவும், அறியமுடியாமலும், இலக்கணம் கூறமுடியாததாகவும், விளக்க முடியாததாகவும், ஆழ்துயிலில் உள்ளதைப்போலவும் இருந்தது என்று மநுகூறுகிருர். எனவே இப்படி என்று கூற முடியாததைத்தான் தமஸ் என்று கூறியது.

இவ்வாறு ப்ரம்மா, விஷ்ணு, ருத்ரன், சிவன் என உபநிஷத்துக் களில் நான்காகக் கூறப்பெற்ற இத்தப்பகுப்பே சைவாகமம், பஞ்சராத்ரம், வைகானஸம் ஆகிய தந்திரங்களுக்கு மூர்த்தி பேதங்களை விளக்கப் பயன்பட்டது.

விஷ்ணு, வாஸுதேவன், நாராயணன் என்பவர்களைத் தனித் தனி மூர்த்திகளாகக் கொண்டு பஞ்சராத்ரம் கூறுகிறது. உதாரணத்திற்குச் சில :- விஷ்ணுலோகத்திற்குமேல் நாராயண லோகம் உள்ளது என்று ஸனத்குமாரஸம்ஹிதை கூறுகிறது.

" தஸ்யோபரி மஹாவிஷ்ணோர்லோக ஏவ ப்ரதிஷ்டித:l
தஸ்யோபரி மஹாவிஷ்ணோரசிந்த்யஸ்தமஸ: பர:ll
தமாஹு: புருஷம் திவ்யம் நாராயணமநாமயம்l
தஸ்மாத் பரதரம் கிஞ்சித் ந பூதம் ந பவிஷ்யதி "

(ஸனத்குமாரசம்...இந்திரராத்ரம் 7-107-110)

முதலில் வாசுதேவன் இருந்தார். அவரிடமிருந்து மீண்டும் ஒருவாசுதேவன் தோன்றினர். அவர் தன்னை இரண்டாகப் பிரித்துக்கொண்டார். ஒருவர் வாசுதேவனென்றும், மற்றவர் நாராயணன் என்றும் பெயர் பெற்றனர். மீண்டும் வாசுதேவனிட மிருந்து சங்கர்ஷணர் தோன்றினர். அவரிடமிருந்து ப்ரத்யும்னரும், அவரிடமிருந்து அநிருத்தரும் தோன்றினர்.

" வாஸுதேவாத்ததோ ஜாதோ வாஸுதேவாஹ்வயோபர:l
ஆத்மானம்த்விவிதம் சக்ரேபுன: கேனபிஹேதுனl
தயோரேகோ வாஸுதேவ: சுத்தஸ்படிகஸந்நிப:ll
நாராயணோ த்விதீயஸ்து நீலாம்புத ஸமப்ரப:l
ஸங்கர்ஷணோ வாஸுதேவாத் தஸ்மாத்ப்ரத்யும்னஸம்நித:ll
ப்ரத்யும்னதனிருத்தோ பூத்.................l "

(பாத்மஸம்ஹிதா ஞானபாத... அத்-2)

விஷ்ணுவின்சரித்திரங்கள் ஏராளமாகப்புராணங்கள்முழுமையும் உள்ளன. வேதத்தில் ஒருசில கதைகளைத் தவிர மற்றகதைகள் ஒன்றும் காணப்படவில்லை. பெரியரிஷிகள், தபஸ்விகள், அரசர்கள் போன்றவர்களை யெல்லாம் விஷ்ணுவின் அவதாரங்களாகப் புராணங்கள் கூறுகின்றன. கபிலர், பரசுராமர் நர - நாராயணர்கள் போன்றவர்கள் வேதமந்திரங்களைக் கண்ட ரிஷிகளைச் சேர்ந்தவர்கள். தத்தாத்ரேயர், ஸனகாதிகள் போன்றவர்கள் தபஸ்விகள், ரிஷபதேவர் ஜைனமதத்தின் முதல்தீர்த்தங்கரர். புத்தர், புத்த சமயத்தைக் கண்டவர். புத்தரின் திருவுருவப்பிரதிஷ்டை, புத்தரைப் பூஜிக்கும் முறை இவைகளைப் பாஞ்சராத்ரம் கூறுகிறது. புத்த சாளக்ராமம் கூடஉண்டு. இராம், கிருஷ்ணர், பலராமர் போன்றவர்கள் பேராசர்கள். இவ்வாறு தொகுக்கப்பெற்றவைகள் விஷ்ணுவின் அவதாரங்கள். வேதத்துள் விஷ்ணுஅவதாரம் எடுத்ததாகவோ அவைகளைச் சிவபெருமான் சங்கரித்ததாகவோ கதைகள் இல்லை. இவை சமயச்சண்டையில் விளைந்த கதைகள் தாம் என்பதில் ஐயமில்லை.

வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்யும்னன், அநிருத்தன் என்பன வ்யூகமூர்த்திகளின் பெயர்கள். எவர் தத்வாதீதரான பரசிவனோ அவர்தான் வாசுதேவர் என்று பாஞ்சராத்ரநாரதிய சம்ஹிதை கூறுகிறது.

" பகவான் ஏக ஏவாசீத் வாசுதேவ: சநாதன:।
பரமாத்மா நிராபாச: தத்வாதீத: பர: சிவ:॥
ஞானசக்தி சமோபேத: சநேய: புருஷோத்தம:। "

அத்வைத ஆசார்யர்களுள் ஒருவர் மதுசூதனசரச்வதிஎன்பவர். அவர் "ஈசுவரப்ரதிபத்திப்ரகாசம்" என்னும் நூல் எழுதியிருக்கிறார். அதில் "சர்வோபாதிவிநிர் முக்தஸ்த்வவி கல்போவாசுதேவ: பரமாத்மா மோக்ஷாவலம்பனத் ப ஏவ சதாசிவோ நிராகாரச்ச" என்று கூறுகிறார்.

எல்லா அடையாளங்களிலிருந்தும் விடுபட்டவர் பிரமாத்மா வாசுதேவர். அவரே உருவமற்ற சதாசிவர் என்பது இதன்கருத்து. பாஞ்சராத்ர சம்மிதைகளை அடியொற்றிய பல வைஷ்ணவ உபநிஷத்துக்கள் தோன்றின. அவைகள், அவ்யக்தோபநிஷத், கலிசந்தரணோபநிஷத், க்ருஷ்ணோபநிஷத், கருடோபநிஷத், கோபால தாபினி உபநிஷத், தாரசாரம், த்ரிபாத்விபூதிமஹாநாராயணம், தத்தாத்ரேயம், நாராயணம், ராமதாபினி, ராமரகசியம், வாசுதேவம், சுபாலம், ஹயக்ரீவம் என்பன வைஷ்ணவ உபநிஷத்துக்கள். சில உபநிஷத்துக்கள் வ்யூகங்களையும், பல உபநிஷத்துக்கள் பிரம்மவிஷ்ணு ருத்ரன் சிவன் என்ற முறையில் பிரணவப் பொருளை விளக்கியும் கூறுகின்றன. சைவக் கருத்தே வைணவப் பெயரால் விளக்கப் பெறுகின்றது. இந்த உபநிஷத்துக்கள் பாஞ்சராத்ரம், இராமயணம், பாரதம், புராணங்கள் போன்ற நூல்கள் ஏற்பட்ட பிறகே எழுதப் பெற்றிருக்கவேண்டும் என்பது நிச்சயம்.

பாணினிய வியாகரணம் "வாசுதேவார்ஜுனுப்யாம் வுந்" (4-3-98) என்று வாசுதேவரைத் தெய்வமாக உபாசிப்பதைக் காட்டுகிறது. கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்தில் விஷ்ணுவுக்குக் கோயில் இருந்ததைக் கூறுகிறார். மகாபாரதம் முதலான நூல்களைப் பார்க்கும்போது கிருஷ்ணர் வழிபாடே வைஷ்ணவமாக மலர்ந்ததைக் காணமுடிகிறது. அமரகோசம் என்ற நூலில் விஷ்ணுவின் பெயர்களாக, கிருஷ்ணனின் பெயர்களைத் தாம் காண முடிகின்றன. அங்கு இராமனுடைய பெயர்கள் கூறப்படவில்லை. கிருஷ்ணர் ஆங்கீரசரிஷியிடம் கல்வி கற்றார் என்று சாந்தோக்கியம் என்ற உபநிடதம் கூறுகிறது. (சாந் 3-17) பிறகு உபமந்யுவிடம் பாசுபத தீட்சை பெற்று, தவம் செய்து சிவானுபவத்தால் யோகியானார். அர்ஜுனன் கிருஷ்ணரைச் சிவனாகநினைத்து பூஜித்தான். இவ்வாறு ஆரம்பித்த கிருஷ்ண வழிபாடு விருஷ்ணிகள் அல்லது சாத்வதர்கள் என்பவர்கள் மூலம் விஷ்ணு ஆராதனமாக மலர்ந்தது.

பாஞ்சராத்ரசம்ஹிதைகள் மொத்தம் நூற்றெட்டு இவைகளுள் சத்வதம், பௌஷ்கரம், ஜயாக்யம் என்னும் மூன்று சம்ஹிதைகளே பழமையானவை. ஏகாயனம் என்னும் வேதசாகையினின்றும் தோன்றியது பாஞ்சராத்ரம் என பாஞ்சராத்ர நூல்கள் கூறுகின்றன. அப்பையதீக்ஷிதர் ஏகாயனம் என்ற பெயரில் வேதசாகையே கிடையாது என்று பரிமளம் என்ற தமது உரையில் கூறுகிறார். ஆதிசங்கரர் சாந்தோக்யோபநிடத்தின் உரையில் ஏகாயனம் என்னும் சொல்லுக்கு நீதிசாத்திரம் எனப்பொருள் கூறியிருக்கிறார்.

ஆதிசங்கரர் பிரம்ம சூத்ரபாடியத்தில் இரண்டாவது அத்தியாயத்தில் பாஞ்சராத்ர மதத்தை அவைதிகம் என்றும், பொருந்தாத கற்பனை என்றும் கண்டனம் செய்கிறார்.

'வேதவிப்ரதிஷேதச்ச பவதி। சதுர்ஷு வேதேஷு பரம்ச்ரேயோ sலப்த்வா சாண்டில்ய இதம் சாஸ்த்ரமதி கதவாநித்யாதி வேத நிந்தா தர்சனாத் தஸ்மாதஸங்கதைஷா கல்பநேதி ஸித்தம்'

இவ்வாறு சங்கரர் கண்டித்ததனால்தான் தமிழ் நாட்டில் வைணவ சமயமே தோன்றியது, பாஞ்சராத்ரம் பிரமாணமானது தான் என்பதைச்சாதிக்க யாமுனாசாரியரால் "ஆகமப்ராமாண்யம்' என்னும் நூல் எழுதப்பட்டது. அந்நூலில் சங்கரர் பாஞ்சராத்ரத்தைக் கண்டித்ததைக் கூறுகிறார்.

" யத்யமி பாகவதா மந்யந்த சங்கரே சாரீரகபாஷ்யே।
தகிஹ பாகவதம் கதமத்ஸரா மதமிதம் விம்ருசந்து விபச்சித:॥

பிரம்மசூத்ரத்திற்குச் சைவ பரமாக மூன்று உரைகள்தாம் உண்டு. ஒன்று ஸ்ரீ கண்டபாஷ்யம். மற்ற இரண்டும் வீரசைவத்தைச் சார்ந்த ஸ்ரீ கரபாஷ்யமும், நீலகண்டபாஷ்யமும். ஆனால் வைணவத்தில் இராமாநுஜரின் ஸ்ரீ பாஷ்யம், மத்வரின் பாஷ்யம், நிம்பார்க்கரின் பாஷ்யம், வல்லப பாஷ்யம், பலதேவரின் பாஷ்யம் என ஐந்து பாஷ்யங்கள் உள்ளன. இவைகளின் வழிநூல்களும், சார்புநூல்களும் நிறைய உள்ளன. இராமாநுஜரின் விசிஷ்டாத்வைதம் புதிதாக ஏற்பட்டதுதான் என்று வேதாந்த தேசிகர் இரண்டு இடங்களில் கூறுகிறார். யதிராஜசப்ததிம்சதி என்னும் நூலில் 57 ஆவது சுலோகத்திலும், சங்கல்ப சூரியோதயம் என்னும் நாடகத்தில் இரண்டாவது அங்கத்திலும் கூறுகிறார்.

மத்வர் போன்றவர்கள் புராணங்களுக்கு ஏற்ப வேதம், உபநிஷத், பிரும்மசூத்திரம் இவைகளுக்குப் பொருள்படுத்தினார்கள். மத்வ சம்பிரதாயப்படி மூலஇராமாயணம், மகாபாரதம், விஷ்ணு

புராணம், பாஞ்சராத்ரம் இவைகளுக்கு ஏற்ப வேதப் பொருள் கூற வேண்டும் என்கின்றனர். வல்லபர், வழி வந்தவர்கள் உபநிஷத்துகள், பிரும்மசூத்ரம், பகவத் கீதை, பாகவதம் என்னும் நான்கில் பின்னால் போகப் போகப் பிரமாணம் அதிகம் எனவே பாகவத புராணத்துக்கு ஏற்பத்தான் பொருள் கூறவேண்டும் என்கின்றனர்.

காடக கிருஹ்ய சூத்ரத்தின் உரையில் தேவர்களை இருவகையாகப் பிரிக்கிறார். ''தேவர்கள் இரு பிரிவினர், உலகியல் தேவர்கள், சாஸ்திரங்களால் அறியப்பட்டவர்கள் என்று. உலகியல் தேவர்கள் துர்க்கை, நாகம், விநாயகர் முதலானவர்கள் என்று கூறுகிறது அந்த உரை நூல். இன்றைய வைணவமும் உலகியல் தெய்வ வழிபாடுதான். வைதிகம் போலக் காட்சி தரும் நெறி அவ்வளவே. சிவனடியார் வழிபாடே இன்றைய வைணவம்.

வங்காள வைணவர்கள் ஆண், பெண் வேற்றுமையற்று பஜனை - வழிபாடுகள் செய்யும் முறை பௌத்தர்களின் சகஜயானத்தினின்றும் எடுத்துக் கொள்ளப் பெற்றது என்று கூறுகிறார்கள். ஸ்வாமிவிவேகானந்தர் கூறுகிறார் "வங்காள வைணவர்களின் வழிபாட்டுமுறை அவர்களுடனேயே இருக்கவேண்டும்; அதைப் பொதுவாக ஆக்கக் கூடாது; மக்களிடம் ஒழுக்கம் என்பதே மறைந்துவிடும்; மக்கட் சமுதாயத்திற்குப் பொதுச் சமயமாக வேண்டுமானால் சிவபக்தி தான் உகந்தது" என்பது சுவாமிகளின் கருத்து.

EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthakadeswarar Devasthanam, Thirukkadavur.

I am happy to have visited the well maintained and sacred shrine along with my wife. May the lord and goddess ambika lolers the people of India with prosperity and peace.

(S-d) Ramakrishna,

16—10—88 Advisor, to Govt of Madras.

அமாவாசை முதலிய புண்ணிய காலங்களில் செய்யப்படும்

திலோதக சைவ பிதிர்த் தருப்பணம் என்னும் நீர்க்கடன்

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ.,

முன்னுரை :

இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டு நல்லறம் புரிய முற்படும் ஆடவர் செய்யவேண்டிய பிதிர்க்கடன்களில் முதன்மையானது தருப்பணம். தருப்பணம் என்பதற்குப் பிதிரர்களுக்குத் திருப்தி அளிப்பது என்பது பொருளாகும். இந்து சமய நூல்கள் பலவும் பிதிரர்களுக்கு ஒருவன் செய்யவேண்டிய கடமைகளை வற்புறுத்துகின்றன. வடமொழியில், புத் என்ற நரகத்திலிருந்து தன்பிதிரர்களை முத்தி உலகிற்குக் கரையேற்றுபவன் என்ற பொருளில் புத்திரன் என்ற சொல் வழங்குவதாயிற்று என்பர். ஒருவன் தன் வருவாயில் ஆறில் ஒன்று அரசனுக்குச் செலுத்தியதுபோக எஞ்சிய ஐந்து கூறுகளைச் செலவிடவேண்டிய முறையை அறிவுறுத்த வந்த திருவள்ளுவர்,

"தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தான்என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை"

என உணர்த்தியருள்கின்றார். இக்குறளில் தென்புலத்தார் என்ற சொல்லுக்குப் பிதிரர் எனப் பரிமேலழகர் உரை எழுதுகின்றார். புறநானூற்றுள் போர்க் காலங்களில் இத்தகையோரைக் கொல்லுதல் கூடாது என அறிவுறுத்தவந்த பாடலுள் 'தென்புல வாழ்நருக்கு அருங்கடன் இறுக்கும் பொன்போன்ற புதல்வர்கள்' எனவரும் தொடரும் ஒருவன் பிதிர்க்கடன் செய்யவேண்டியதைக் குறிப்பாக உணர்த்துகிறது. சூரபன்மனின் மக்கள்பேரிட்டு முருகப் பெருமானதுசினத்துக்கு ஆளாகி அழியமுற்பட்டபோது இரணியன் தன் தந்தைக்கு நீர்க்கடன் ஆற்றுவதற்காகத் தான் அழியாது கடலில் ஒளிந்து வாழ்ந்தான் எனக் கூறக்காணலாம். பெற்றோர் வற்புறுத்தியும் தனக்குத் திருமணம் வேண்டாம் என மறுத்த ஜரத்காரு அவரது முன்னோர் நீர்க்கடன் செய்யத் தவறுவதால் நற்கதி அடையாது வருந்துவதை அறிந்து திருமணத்திற்கு இசைந்தார் என்பதை அறிகிறோம். இவற்றால் ஒருவன் தன் இறந்த முன்னோர்களின் உயிர்களை நற்கதிகளில் செலுத்த நீர்க்கடன் ஆற்றுதல் அவசியம் என்பது புலப்படும்.

ஒரு குடும்பத்தின் தலைமகன் பிதிர்க்கடன் செய்வதால் முன்னோர்களில் பதின்மரும் தன் சந்ததிகளில் பதின்மரும் தானும் ஆகிய மூவேழ் தலைமுறையினர் நற்கதி பெறுகிறார்கள். நற்கதிபெறும் அவன் குல முன்னோர் அவனை வாழ்த்துவதால் உலகியலில் அவனது குடும்பம் வறுமை பிணி முதலியன இன்றிச் செழித்தும் கிளைத்தும் வாழும். அவனது குலம் இடையறவின்றித் தழைக்கும்.

திதி, தர்ப்பணம் முதலிய கிரியைகள் பாவனையால் செய்யப் படுவன. தன் முன்னோர் தான் செய்யும் கிரியைகளுக்கு மகிழ்வர் என்பதையும் தான் வழங்கும் பொருள்களை ஏற்று மகிழ்வர் என்பதையும் ஒருவன் நேரே காணல் இயலாது. அவற்றைப் பாவித்துத்தான் செய்யவேண்டும். தந்தை தாயர்க்குத் திதி கொடுத்தல் என்பது பாவனை என இலக்கண நூல்கள் கூறும். இத்தகைய பிதிர்க்கடன்களுள் ஒன்றான தில தர்ப்பணவிதி அவரவர் குலமரபின்படி போதாயனம், ஆபத்ஸ்தம்பம், சத்யாஷாடம், ஆஸ்வலாயனம் முதலிய மந்திரங்கள் சூத்திரங்களில் முறைகள் வேறுபட்டு வழங்கப்படும். சைவசமயிகளால் ஆகம விதிப்படி அனுட்டிக்கப்படும் தருப்பண முறைகளையும் விதிகளையும் இக் கட்டுரையில் காண்போம்.

புண்ணிய காலங்கள் :

மாதப்பிறப்புக்களிலும் அமாவாசை திதிகளிலும் தருப்பணம் புரிதல் வேண்டும். புரட்டாசி மாதம் அமாவாசைக்குமுன் வரும் 15 நாட்கள் மகாளயகாலமாகும். பிதிரர்களுக்குரிய இந்நாட்களில் தருப்பணம் புரியலாம்.

அமாவாசை பௌர்ணமி:

அமாவாசை திதி தந்தைக்கும் பௌர்ணமி திதி தாய்க்கும் உரியனவாகக் கூறப்படும். சூரியன், சந்திரன் இவ்விருவரும் தந்தையாக, தாயாக விளங்கி உலகைவாழ்விப்பதால் அவ்விருவர்க் குரிய விசேட காலங்கள் தந்தை தாய்க்குரியனவாகச் சொல்லப் படுகிறது. தருப்பணம் தந்தையை முன்வைத்துச் செய்யப்படுவது. தாயை எண்ணிச் செய்யும் கருமமும் அக்கிரியையில் அடங்கு வதால் பௌர்ணமியில் தர்பணம் தனியே விதிக்கப்படவில்லை.

குதபகாலம்:

அமாவாசை தருப்பணம், சிராத்தம் மற்றும் திவசம் ஆகிய வற்றை, குதபகாலத்தில் செய்யவேண்டுமெனப் பத்ததிகள் விதிக் கின்றன. குதபகாலம் என்பது காலை பதினொன்கு நாழிகை

தொடங்கிப் பதினறு நாழிகை வரையான காலமாகும். (காலை 11-36 மணி முதல் 12-24 மணி வரையுள்ள காலமாகும்.)

செய்யத்தக்க இடங்கள் :

திலோதக தருப்பணத்தைத் தமதுவீடு, மலை, கடற்கரை, ஆற்றின் கரை, குளக்கரை, சைவமடாலயம், வனங்கள் ஆகிய இடங்களில் செய்யலாம். பிறர் இல்லங்களில் செய்யின் அவ்வில்லத்துக்குரிய பிதிர்க்களுக்கு உரியதாகும். தன் பிதிர்க்களுக்கு அத் தருப்பணத்தால் பயன்விளையாது.

வேண்டும் பொருள்கள் :

தருப்பணத்திற்கு வேண்டும் பொருள்களை முதலில் சேகரித்துக் கொள்ளவேண்டும். தருப்பை, எள், வெற்றிலை, பாக்கு, ஊதுபத்தி, கற்பூரம் ஆகியனவற்றையும், செப்புச்சொம்பு, தாம்பாளம், பஞ்சபாத்திரம், உருத்துருணி ஆகியவற்றையும் தர்ப்பாசனம் அல்லது ஆசனப்பலகை ஆகியனவற்றையும் சேகரித்து வைத்துக் கொள்ளவேண்டும்.

விரதமும் தூய்மையும்:

அமாவாசை நாட்களில் வீட்டை மெழுகியும் கழுவியும் தூய்மை செய்து கொள்ளல் அவசியமாகும். அன்றைய நாளில் தருப்பணம் செய்து முடிக்கும் வரை உணவு கொள்ளாதிருந்து செய்தல் வேண்டும். நண்பகல் மட்டும் உணவருந்தி இரவில் பல ஆகாரம் புசித்து, பிறகருமம் மேற்கொள்ளாது அன்றைய நாளை மனத் தூய்மை, உடல் தூய்மையுடன் பிதிரர்களை வழிபடும் நாளாகக் கருதிப் போற்ற வேண்டும்.

பிதிரர் பதங்கள் :

இறந்தவர் ஆன்மாக்கள் தாம் செய்த புண்ணிய பாவங்கட்கு ஏற்ற பதங்களையும் பிறப்புக்களையும் எய்தியிருக்காலம். அல்லது பிதிரர் உலகங்களில் வாழலாம். தருப்பணம் செய்பவன் தன் முன்னோர் ஆன்மாக்கள் நற்கதிகளை அடைய வேண்டும் என்ற நினைவோடு செய்வதால் நாம்செய்யும் கிரியைகளால் அவ்வான்மாக்கள் நற்கதிகளை மேலும் எய்துவர்.

சமய விசேட தீக்ஷைகளைப் பெற்றிறந்த தந்தை, பாட்டனர், முப்பாட்டனர் அவர்தம் மனைவியர் முறையே ஸ்கந்தர், கண்டர்,

கணேசர் பதங்களிலும், நிர்வாண தீக்ஷை ஆசாரிய அபிடேகம் பெற்றிறந்தவராயின் அவர்கள் முறையே ஈசர், சதாசிவர், சாந்தர் ஆகிய பதங்களிலும் வைகுவர் என்பதால் மந்திரங்களைச்சொல்லும் போதும் அவர்களை எண்ணும் போதும் அப்பதங்களில் அவர்கள் வீற்றிருப்பதாகத் தருப்பணம் புரிதல் வேண்டும்.

கர்மானுட்டானம் :

காலையில் எழுந்து நீராடி தூய ஆடை உடுத்திக்கொண்டு அனுட்டானம் முதலியவைகளை முடித்துக்கொண்டு தருப்பணம் செய்யத் தொடங்கவேண்டும்.

தருப்பணம் செய்துவைப்பதற்கு ஆசாரியர் ஒருவரை வரித்துக் கொள்ளல் அவசியமாகும். புரோகிதர் என்பதற்கு நம் அருகில் இருந்து நெறிப்படுத்தி நமக்கு நலம் செய்பவர் என்பதும் நமக்கு வரும் நன்மையை முன்னால் தெரிவிப்பவர் என்பதும் பொருளாகும். நாம் செய்யும் செயல்களுக்குரிய பயன்களை நம் முன்னோர்களுக்கு உரியதாக்கி அவர்கள் சார்பில் நமக்கு ஆசியும் அத்தகைய ஆசாரியர் ஒருவரை முன்வைத்து அவர் செய்விக்க நாம் தர்ப்பணம் புரிதலே ஏற்றதாகும். அவ்வாறு ஏற்ற ஆசிரியர் கிடைக்கவில்லை யானால் நாமே தர்ப்பணம் செய்ய முற்படலாம்.

பவித்திரம், கூர்ச்சம் :

பவித்திரம் ஒருகருமாவைச் செய்பவர் வலதுகை மோதிர விரலில் அணிந்து கொள்ளவேண்டிய தருப்பையால் ஆகிய அணிகலன். திருமணக்காலத்தில் இல்லற தருமங்களைச் செய்விக்க மணமகனுக்குப் பொன்னாலியன்ற மோதிரமாக, பவித்திரம் அணி விப்பதைக் காணலாம். கூர்ச்சம், பிதிரர்களை ஆவாகனம் செய்தற் குரிய தருப்பை முடிச்சாகும்.

பவித்திரம்-நுனிகளுடன் கூடிய தருப்பைகள் மூன்றை முறுக்கி நால்விரல் அளவினதாய்க் கைவிரலில் அணிந்துகொள்ளுமாறு முடிச்சிட்டுத்தயாரித்துக்கொள்ளல்வேண்டும். கட்டைத்தருப்பைகள் எட்டு அங்குல நீளம் உள்ளனவாக அரிந்துவைத்துக்கொள்ளல் வேண்டும்.

கூர்ச்சம் ஏழு அல்லது ஐந்து தருப்பைகளைச் சம நுனியுடன் கூடியனவாக எடுத்து முறுக்கி நுனி நாலங்குலமும் முடிச்சு இரண்டு அங்குலமும் அடி எட்டு அங்குலமுமுடையதாக முடிந்துகொள்ளல் வேண்டும்.

பூமிசுத்தியும் பவித்திரமும் :

நீராடித் தான்கொண்டுவந்தசெம்பிலுள்ள தண்ணீரால் தான் இருக்குமிடத்தை 'ஓம் ஹ: அஸ்திராய பட்' என்ற மந்திரத்தால் தெளித்துக் கிழக்கு நோக்கி அமரவேண்டும். பூணூல் புதியதாக அணிபவராயின் முதலில் அதனை எடுத்துச் சிவகாயத்ரியாகிய 'ஓம் தன்மகேசாய வித்மஹே, வாக்விசுத்தாய தீமஹி தந்ந: சிவ பிரசோதயாத்' என்ற மந்திரத்தை ஓதி அணிந்துகொள்ள வேண்டும்.

பின்னர் 'ஆசநே விநியாகா: ஆசனன் நம: பவித்திர தாரணந் நம:' என்று இரண்டு கட்டைப்புற்களைத் தான் அமர்ந்துள்ள இடத்தில்கிடத்தி,பவித்திரத்தைஎடுத்து'உத்தரோத்தரம்ச்ரேயோச் அபிவிருத்தி ரஸ்து' என்றுகூறி வலக்கை மோதிரவிரலில் அணிந்து கொள்ளவேண்டும். 'ஓம் ஹாம் ஹௌம் சிவாய நம:' என்ற சிவ மூலமந்திரத்தைப் பத்துமுறை ஓதித் திருநீறணிந்துகொள்ள வேண்டும்.

கணபதி குருவந்தனம் :

"சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரசன்ன வதனம் தியாயேத் சர்வவிக்நோப சாந்தயே"

என்றுகூறி, தலையின் இருபுறங்களிலும் கைகளால்குட்டிக்கொண்டு 'ஓம் கம் கணபதயே நம:' என்று விநாயகரையும், 'ஓம்ஹாம் சிவகுருப்யோ நம:' என்று குருவையும் கும்பிட்டு ஆசமனம், சகளீ கரணம் பிராணயாமம் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆசமனம் - நம் உடலிலமைந்த ஆன்மதத்துவம், வித்யா தத்துவம், சிவதத்துவம் ஆகியவற்றைத் தூய்மை செய்து கொள்வ தாகப் பாவித்துச் செய்யப்படுவது

'ஓம் ஆத்ம தத்வாயசுவதா', 'ஓம் வித்யாதத்துவாய சுவதா,' 'ஓம் சிவதத்துவாய சுவதா' என்றுகூறி ஒவ்வொரு மந்திரத்திற்கும் உருத்திருணியால் தண்ணீர் எடுத்து வலதுகையில் ஊற்றி உட் கொள்ளவேண்டும்.

சகளீகரணம் - நமது உடலில் பசு கரணங்களாக உள்ள நம் உடலுறுப்புக்களைப் பதிகரணங்களாகப் பாவிக்க உதவுவது. இது கரநியாசம் அங்க நியாசம் என இருவகைப்படும்.

கரநியாசம்-கையில்சிவமந்திரங்களைப்பதித்தல்-அங்கநியாசம்-சிவமந்திரங்கள் பதிக்கப்பெற்ற கைகளினால் உடம்பின் பகுதிகளில் சிவமந்திரங்களைப் பதித்தல். பிராணயாமம் - பிராணவாயுவை இழுத்து நிறுத்திவிடும் யோகம். இவற்றை விரிவாக சைவ அனுட்டானக் கிரியை நூல்களால் அறியலாம்.

சங்கற்பம் :

கையில் அணிந்துள்ள பவித்திரத்துடன் இரண்டு தருப்பைகளை உப பவித்திரமாக மடக்கி அணிந்து கொண்டு வலக்கையில் சிறிதளவு எள்ளும் மூன்று கட்டைத் தருப்பைகளையும் எடுத்துக் கொண்டு முடி இடது கையின் மேல் வலது முழந்தாளில் வைத்துக் கொண்டு சங்கற்பம் தொடங்க வேண்டும்.

'ஓம் சிவ சிவ சம்போராஞ்யா ப்ரவர்த்தமானஸ்ய ஆத்ய ப்ரம்ஹண: த்வி தியபரார்த்தே ஸ்வேத வராககல்பே வைவஸ்வத மந்வந்தரே, அஷ்டாவிம்சதிதமே தத்ரகலியுகே ப்ரதமபாதே ஜம்புத்வீபே பாரதவருஷே பரதக் கண்டே மேரோர் தக்ஷிண பார்ஸ்வே ஹிமகேஸதுமத்யேசகாப்தே அஸ்மின்வர்த்தமான வ்யவஹாரிகே ப்ரபவாதி ஷஷ்டி சம்வத்ஸராணும் மத்யே (இன்ன) சம்வத்ஸரே (இன்ன) அயனே (இன்ன) ருதௌ (இன்ன) மாஸே (இன்ன) பக்ஷே (இன்ன) திதௌ (இன்ன) வாஸரே (இன்ன) நக்ஷத்திரயுக்தாயயாம் சுபர்ரண ஏவங்குண விசேஷேண விசிஷ்ட்ர யாம் அஸ்யாம் வர்த்தமாணயாம் புண்யதிதௌ மம (இன்ன) கோத்ர (இன்ன) சூத்ர (இன்ன) தீக்ஷாநாமயுக்தாநாம், ஸ்கந்த சண்ட கணேச சிவஸ்வருபாணும், பித்ரு, பிதாமஹ ப்ரபிதாமகாநாம்; மாத்ரு, பிதாமஹி ப்ரபிதாமஹிநாம் மாதாமஹ மதுர்பிதா மஹமாதுர் பிரபிதாமஹாநாம் மாதாமஹி மாதுர்பிதாமஹி மாதுர்ப்பிரபிதாமஹிநாப் ‡ சர்வேஷாம்உபயவம்ச† காருண்ய பிதுருணும் அக்ஷய திருப்தியர்த் தம் (இன்ன) புண்யகால (இன்ன) நதிதீரே திலோதக தர்ப்பணம் அகம் அத்யகரிஷ்யே. (இன்ன) என்னும் இடங்களில் உரிய வருடம், மாதம், பக்ஷம், திதி, கிழமை,

---

‡ பிதா - தந்தை, பிதாமகர் - பாட்டனர். பிரபிதாமகர் - முப்பாட்டனர். மாதா - தாய், பிதாமகி - பாட்டி, பிரபிதாமகி - முப்பாட்டி, மாதாமகர் - தாயின்தந்தை, மாதுர் பிதாமகர் - தாயின் பாட்டனர், மாதுர் பிரபிதாமகர் - தாயின் முப்பாட்டனர், மாதாமகி - தாயின்தாய், மாதுர் பிதாமகி - பாட்டி, மாதுர் பிரபிதாமகி முப்பாட்டி இவர்களில் உயிரோடு இருப்பவர்களை விட்டுவிட வேண்டும். † காருண்ய பிதுர்களை மகாளய காலங்களில் மட்டும் சொல்லிக் கொள்க.

என்று சங்கற்பித்து கையிலிருக்கின்ற கட்டைப்புல் எள் முதலியவற்றை வடதிசையில் போட்டுவிட்டு, கரசுத்தி செய்து கொள்ளவும்.

தருப்பணம் :

தாம்பாளம் ஒன்றை எதிரே வைத்துக்கொண்டு மூன்று கட்டைத் தர்ப்பைகளை அதில் ஆசனமாகக் கிடத்தி அவைகளின் மேற் கூர்ச்சத்தை தெற்கு நுனியாக வைத்துப் பூணூலை வலம் இடமாக மாற்றிக் கொண்டு ஓம் ஹீம் வாமதேவ குஹ்யாய நம: என்று கூறி எள் சிறிது கையில் எடுத்துக் கொண்டு கூர்ச்சத்தில் போட்டுக்கொண்டே பித்ராசனாய நம: பித்ருமூர்த்தயே நம: பித்ரே நம: என்று கூறி, ஆவாகன ஸ்தாபன சந்நிதான சந்நிரோதனம் செய்து ஓம் ஹோம் ஈசான மூர்த்தாய ஸ்வாஹா என்று சந்நிதான அர்க்கியம் கொடுத்து ஓம் ஹாம் ஸ்கந்தாய பித்ரு வே நம: ஓம் ஹாம் சண்டாய பிதா மஹிப்யே நம: ஓம்ஹாம் ஸ்கந்த சண்ட கணேச ஸ்வரூவ காருண்ய பித்ருப்ய நம: என்று சங்கல்பத்தில் குறிப்பிடப்பட்ட பிதிரர்களைக் கூறி எள்ளினால் அர்ச்சித்து இடது முழந்தாளைப் பூமியில் ஊன்றி நிமிர்ந்து இரண்டு கைகளையும் கூட்டியே விரித்து அஞ்சலியாக்கிச் சமநுனி உடைய மூன்று தருப்பைகளை இரண்டு பெருவிரல்களில் வளைத்து மாட்டிப் பிடித்துக்கொண்டு தண்ணீரும் எள்ளும் கொண்டு தண்ணீர் கூர்ச்சத்தில் விழுமாறு கைகளை அமைத்துக்கொண்டு தண்ணீர் நிரப்பிய பஞ்சபாத்திரத்தைக் கைகளில் ஏந்தி எள்ளும் தண்ணீரும் தருப்பையின் நுனிவழியாகக் கூர்ச்சத்தில் விழுமாறு செய்து கொண்டு ஓம் ஹாம் ஸ்கந்தாய பித்ருவே திலோதகம் ஸ்வதா, ஓம் ஹாம் சண்டாய பிதாமஹாய திலோதகம் ஸ்வதா ஓம் ஹாம்கணேசாய பிரபிதாமஹாய திலோதகம் ஸ்வதா, ஓம்ஹாம் ஸ்கந்தாய மாத்ருப்ய திலோதகம் ஸ்வதா ஓம் சண்டாய பிதா மஹிப்ய திலோதகம் ஸ்வதா, (ஏனைய பிதிரர்களுக்கும் இவ்வாறே சொல்லிக்கொள்ளவும்.) ஓம்ஹாம் சர்வேப்பிய ஆசார்யேப்பிய திலோதகம் ஸ்வதா என்று ஒவ்வொருவர்க்கும் மூன்று முறை நீரை தருப்பை நுனியோடு கூடிய பெருவிரல் நுனியால் விட்டு, தருப்பணம் செய்து 'என்குலபிதுரர்களே என்னால் விடப்பட்ட திலோதகத்தினால் நற்கதியையும் திருப்தியையும் அடையுங்கள்' என மனத்தால் தியானித்து ஓம் ஹஹா அஸ்த்ராயபட் என்று கூறி, தர்ப்பையையும் எள்ளையும் விசர்ச்சனம் செய்க.

பிறகு 'ஓம் ஹாம் அகோர ஹ்ருதயாய நம: தூபம் ஆக்ராபயாமி' தீபம் தர்சயாமி என்று அப்பிரதக்ஷிணமாகத் தூபதீபம் கொடுத்து வாழைப்பழம் தாம்பூலம் ஆகியவற்றைத் தொட்டு 'பூகீபல சமாயுக்தம் நாகவல்லி தளேருகம் கற்பூர சூர்ணசம்யுக்தம்

தாம்பூலம் பிரதிக் ரஹ்யதாம்' என்று நிவேதித்து 'ஓம் ஹிம் வாமதேவ குஹ்யாய நம: கற்பூரார்த் திகம் தர்சயாமி' என்று கற்பூர தீபம் கொடுத்து எழுந்து நின்று 'யானிகானிச்ச பாபாநி ஜன்மாந்திர' கிருதானிஜதானிதானி வினச்சயந்தி பிரதக்ஷிணபதேபதே, எனக் கூறிக்கொண்டு தன்னைத்தானே மூன்று முறை வலம் வந்து வெற்றிலை பாக்கைக் கையில் எடுத்து அதில் தக்ஷிணை வைத்து சிறிது எள் இட்டு அதில் தண்ணீர் இரண்டு கரண்டிகள் ஊற்றி வெற்றிலைக்காம்பு வழியாகக் கூர்ச்சத்தில் இட்டு அதனை ஆசாரியனிடம் கொடுத்து வணங்கி ஆசி பெற்று அமர்ந்து கூர்ச்சம் பவித்திரம் ஆகியவற்றின் முடிப்புக்களை அவிழ்த்து வைத்து 'பித்ரேயதாஸ்தானம் பிரதிஷ்டாபயாமி' எனக் கூறித் தாம்பாளத்தில் விழுந்துள்ள எள்ளில் சிலவற்றை எடுத்து 'திருப்தோபவ:' எனமுகந்து பின் பக்கத்தில் எறிந்துவிட்டு, பழம் தாம்பூலம் ஆகியவற்றைப் பிரசாதமாக எடுத்து வைத்துக் கொண்டு தருப்பை எள் முதலியவற்றை ஆறு குளம் ஓடை முதலியவற்றில் சேர்ப்பித்து விட்டு, கைகால்களைச் சுத்தி செய்துகொண்டு வீட்டிற்கு வந்து ஆசமனம் செய்து விபூதி அணிந்து 'ஓம் ஹ்ரூம் அகோரஹ்ருதாயாய நம:' என்ற மந்திரத்தை இருபத்தொரு முறை செபித்து உறவினர் நண்பர்களோடு உணவு அருந்தித் தாம்பூலம் தரித்தல் வேண்டும்.

தேவாரம்

திருச்சிற்றம்பலம்

மாதா பிதாவாகி மக்க ளாகி
    மறிகடலும் மால்விசும்பும் தானே யாகிக்
கோதா விரியாய்க் குமரி யாகிக்
    கொல்புலித்தோ லாடைக் குழக னாகிப்
போதாய மலர்கொண்டு போற்றி நின்று
    புனைவார் பிறப்பறுக்கும் புனித னாகி
யாதானு மெனநினைந்தார்க் கெளிதே யாகி
    அழல்வண்ண வண்ணர்தாம் நின்ற வாறே.

— திருநாவுக்கரசர்

திருச்சிற்றம்பலம்.

இத்தில தருப்பணம் திருவருணை தி. ஈசானதேவர் எழுதிய விதியைப் பின்பற்றியதாகும்.

புனிதா! நீ வாழ்க!

"செந்தில் குமரன்"

சித்தாந் தத்தின் செந்நெறியைச்
சிறக்க விரிக்கும் சீரியனே!
பத்தா! ஞானப் பகலவனே!
பண்பிற் சிறந்த எம்பதியே!
முத்தா! முனிவா! முத்தமிழோய்!
முல்லை போல மணம் தருவோய்!
அத்தா! நின்சீர் யார் விரிப்பார்?
ஆயில் யத்தோய்! வாழியவே! (1)

காசி நகரில் சைவ மணம்
கமழ மலர்ந்த கற்பகமே!
நேசித் தங்கே மொழி நாலில்
நிகழ்ச்சி விரித்த செயல் கண்டே
வாசி யான பிறமொழியார்
வந்து வியக்கச் செய்தாய்நீ!
ஆசி பெரிது! பெரிது அம்ம!
ஆயில்யத் தோய் வாழியவே! (2)

முன்நேர் தருமை ஆதீன
மூர்த்தங் கட்குக் குடமுழுக்கு,
பொன்னே போலப் போற்றி, புரி
புகழோய்! புனிதா! நீ வாழ்க!
தன்னேர் இல்லாத் தருமபுரத்
தலைவா! தனிச்சீர் தவமணியே!
அன்னே! வாழும் அருள்வடிவே!
ஆயில் யத்தோய்! வாழியவே! (3)

மேலை நாட்டுத் தத்துவ மேதைகள்

(Western Philosophers)

சுவாமி வீரபாகு

3. அரிஸ்டாட்டில் (Aristotle) - தொடர்ச்சி (8)

(கி. மு. 384-322)

(மலர் 48, இதழ் 1, பக்கம் 33 இன் தொடர்ச்சி.)

அரசியல் சட்டம் இன்றேல் அது கொடுங்கோன்மையே!

எந்த ஓர் ஆட்சி முறையாயினும் அஃது ஓர் அரசியல் சட்டம் கொண்டதாக (Constitutional government) இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அது மக்களுக்கு அறம் உடையதாகவும் அரண் உடையதாகவும் அமைய முடியும். அஃது இன்றேல், அங்குப் பாது காப்பு இல்லை - பயனும் இல்லை. அரசியல் சட்டம் இல்லாத சூழ் நிலையில் கொடுங்கோன்மை (tyranny) மெல்லத் தலை எடுத்து மேலோங்கும். அநீதி தாண்டவமாடி அலங்கோலம் தோன்றும். அரசியல் சட்டம் இருந்தால் எவரும், அநீதி தோன்றினுலோ, அறம் மறைந்து மறம் நிறைந்து காணப்பட்டாலோ, அதைச் சட்டத்தைக்கொண்டு சாடி, நீதிமன்றம் சென்று அதனை நிறுத்தித் தடுக்கவும் வாய்ப்பும் வசதியும் ஏற்படும். இக்கருத்தை அரிஸ் டாட்டில் அழுத்தமாகவும் ஆழமாகவும், பொருத்தமாகவும் புதுமையாகவும் வற்புறுத்துகிறார். அரசியல் சட்டத்தின் அவசி யத்தை, பாதுகாப்பை பண்பை, பயனை, முக்கியத்துவத்தை முடுக்கி முறை செய்த முதல்வர், மேதை, அரசியல் ஞானி, அற நெறியாளர் அரிஸ்டாட்டில் தான் என்றால் அஃது ஒன்றும் மிகையாகாது.

எவ்வித ஆட்சி முறைக்கும் அரசியல் சட்டம் அவசியம் :

ஆட்சி முறை எதுவாயினும் சரி, அஃது, ஒரு மனிதன் ஆட்சி யாகிய சர்வாதிகாரம் (Dictatorial) ஆயினும் சரி, பிரபுக்கள் ஆட்சி (Aristocraey) பிறங்கி நின்றாலும் சரி, பல மனிதரின் குழு வாட்சி (Oligarchy) யாகிப் பரிபாலனம்செய்யினும் சரி, ஜனங்களே

முதன்மை பெறும் ஜனநாயகம் (Democracy) செயல்பட்டாலும் சரி, எம்முறை என்றாலும் அங்கே அரசியல் சட்டம் அரியணை ஏறவேண்டும்-ஆட்சிக்கு அடிப்படையாக அஃது அமையவேண்டும்-அஃது ஆட்சிக்கு ஆணிவேராக ஆக வேண்டும். இல்லையேல் அவ்வாட்சி முறையில் மாட்சி நிறைவு மலராது; மக்களுக்குப் பயனும் பாதுகாப்பும் தோன்றாது. சர்வாதிகாரத்தில், ஒரு மனிதனிடம் சர்வ அதிகாரமும் தரப்படுகிறது. பிரபுக்கள் ஆட்சியில் பிரபுக்களிடன் அதிகாரம் அடைக்கலப்படுத்தப்படுகிறது. குழுவாட்சியில் ஒரு சில குறிப்பிட்ட மனிதர்களிடம் அதிகாரம் கொள்ளத் தரப்படுகிறது. ஜனநாயகத்தில், பாமர மக்களே பலங் கொண்டவர்களாக நிற்கும் மன்றத்திற்கு, நாடாளும் அதிகாரம் நல்கப்படுகிறது. இவற்றில் எதுவாயினும் சரி; இவை அதிகாரத்தைக் துஷ்பிரயோகம் செய்யும் மனோநிலை பிறக்க வாய்ப்பு வரநேரும். ஒருவராயினும் சரி; பலராயினும் சரி - பரவலாக அவர்தம் ஆசாபாசத்திற்கு உட்பட அதிகாரங்கள் அவர்களிடம் அளிக்கப்பட்டால் அங்கே பாதுகாப்பு ஏது? நீதி முறை வழுவாது நிற்க நெறி முறை எங்கே? சத்தியம் நிலவச் சந்தர்ப்பம் நிச்சயம் உண்டா? இல்லவே இல்லை. ஆனால் அரசியல் சட்டம் அமைக்கப்பட்டிருந்தால் அங்கே ஆட்சிக்கு வழிகாட்டும் நெறிமுறைகள் (Guidelines) உண்டு. தவறு நேர்ந்தால் தடுத்து நிறுத்தத் தற்காப்புஉண்டு. சத்தியம் மாறினால் அதைச்சாடிமாற்றச் சந்தர்ப்பம் உண்டு. நீதிமன்றத்தைஅணுகிநீதிகோரற்குநிச்சயமாகப் பரிகாரம் உண்டு. இதை அரிஸ்டாட்டில் அருமையான வாதத் திறத்தோடு வகுத்து உரைக்கிறார். Any government without a constitution is a tyranny, whether it is the government of one man, a few men or many men. The unrestrained will of a handful of plutocrats or of a horde of proletarians is just tyranny as the unrestrained will of one man. The dictatorship of a class is no better than the dictatorship of an individual) எனவே அரசியல் சட்டம் கொண்ட ஆட்சி - அறம் கொண்ட ஆட்சி - ஆதரவுதரும் ஆட்சி - ஆணவச் சூழலை அடக்கும் அன்பு ஆட்சி - கொடுங்கோன்மையைக் கொன்று ஒழிக்கும் நலம் தரும் நல் ஆட்சி. 'அரசியல் சட்டம், ஆட்சி முறைக்கு அடிப்படைத்திட்டம்' என்றால் அஃது அர்த்தமுள்ள நன்னெறி ஆகும் - உண்மையும் ஆகும் - உயர்வும் ஆகும்.

நமக்கு ஏற்ற நல் ஆட்சி எது?

அரிஸ்டாட்டில், அடுத்து எது ஏற்றதான நல்லாட்சிஎன்பதை எடுத்து இயம்புகிறார். சர்வாதிகாரம் இல்லாத ஆட்சியே சால்பு மிக்க நல் ஆட்சி (the parfect type of undictatorial goverment)

என்று சாற்றுகின்றார் அரிஸ்டாட்டில். அவ்வாட்சி முறை பிளேட்டோவின் பொதுவுடைமைக் குடியாட்சியில், (Plato's Communistic Republic) ஆட்சி முறையில் கிட்டாது என்று தம் குருநாதர் கோட்பாட்டையே குற்றம் சாற்றிக் குறை கூறுகிறார். பெண்கள், குழந்தைகள், சொத்துக்கள் இவற்றை, பிளேட்டோ கூறியதுபோல், பொதுவுடைமை ஆக்கினால், பொதுவாகச் சங்கடங்களும், சச்சரவுகளும், அபிப்பிராயபேதங்களும் பூசல்களும் பொல்லாங்குகளுமே என்றும் நிலவி நிற்க வாய்ப்பு ஏற்படும். பொதுவுடைமை, தனிமனிதன் பொறுப்புக்களை உடைத்துத் தூளாக்கும். எல்லாரும் உடைமை கொண்டால் ஒருவரும் அதனைக் கருதிச் செய்ய மாட்டார்கள். "What every body owns, nobody cares for). பொதுவான பொறுப்பு எனில் தனிமனிதன் புறக்கணிப்பில் முடியும் (Common balility means Individual negligence) ஒவ்வொரு மனிதனும் தனக்குள்ள ஒரு கடமையைப் பிறர் செய்யட்டுமே எனக் கருதித் தவிர்க்கவிட நேரிடுவது சகஜமாகிவிடும் ("Every body is inclined to evadc a duty, which he expects another to fulfil") இதனால் குடிமகன் (Citizen) குணக்கேடனாகவும், தனிஒழுக்கம் இல்லாதவனாகவும் (Individual character), அறத்தை அலட்சியம் செய்பவனாகவும், கடமை யுணர்வுக்கட்டு அற்றவனாகவும், பொதுஒழுக்கத்தைப்புறக்கணிப்ப வனாகவும் ஆக வாய்ப்புக்கள் வந்து நேரக் கூடும். இதுதான் பொதுவுடைமை, ஜனநாயகம், சமதர்மம் (Socialism) போன்ற மக்களாட்சி முறைகளிலே ஏற்படக் கூடிய மகத்தான தீமைகள் என்பது அரிஸ்டாட்டில் கூறும் அருமையான அறங்கொண்ட சித்தாந்தம். பெரும்பான்மை மக்கள் பாமரர்கள். தலைக்கணக்கு தானே ஒழிய தன்மைக்கணக்கு அங்கே இல்லை என்கிறார், அரசியல் அறிஞர் அரிஸ்டாட்டில். பாமரமக்கள் பலர். படித்தோர் பணக்காரர், பண்பாளர், நல்லோர், மதத்தலைவர் சிலரே. பாமர மக்கள் ஆட்சியிலே இவர்கள் நலம் பேணப்படாமல் பொதுவாகப் புறக்கணிக்கப்பட நேரலாம். ஜனநாயக ஆட்சியின் சங்கடத்தை யும் தீமையும் இங்ஙனம் அரிஸ்டாட்டில் சுட்டிக்காட்டிப் போகிறார். இது கருதற்பாலது.

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு :

ஒவ்வொரு மனிதனின் தனி ஒழுக்கமும் பொது ஜனநன்மைக் காகப் புகுத்தப்படல் வேண்டும். இன்னொன்றும் அவசியம். ஒவ்வொரு மனிதனின் தனிப்பட்ட செல்வமும் பொதுமக்கள் பயன் பெற ஒதுக்கப்படுதலும் வேண்டும். இதை நடைமுறைப் படுத்தப் பட, தனிச்சொத்துரிமை (Right of private property)

அனுமதிக்கப்படவேண்டும். இந்தக்கூட்டுறவு மனோபாவம் சமுதாயத்தில் இருக்க வேண்டுவது அவசியம் என்கிறார் அரிஸ்டாட்டில். உதாரணமாக, கிருத்துவ மிஷினரிகள் கல்விக் கூடங்கள், மருத்துவச் சாலைகள் போன்ற சமுதாய சேவைகளை மேற்கொண்டுள்ளனர். தருமை ஆதீனம் ஆரம்பப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி, கல்லூரி, மருத்துவமனைகள், அனைத்துலக ஆராய்ச்சி நிறுவனம் போன்ற பல சேவைப் பணிகளை மேற்கொண்டுள்ளது. தனிப்பட்ட மனிதர்கள் சொத்துரிமை அனுமதிக்கப் படுவதால் பலநற்பணிகளை மேற்கொள்கின்றனர். உதாரணமாக, பச்சையப்ப முதலியார் அறநிறுவனம், ஏ. வி. சி. அறநிறுவனம் போன்ற வற்றைக் குறிப்பிடலாம். இதற்குக் கூட்டுறவும், ஒற்றுமையும் இன்றியமையாதனவாகும். சட்டமன்ற உறுப்பினர் இதை எய்தச் செயல்படவேண்டும் என்கிறார் அரிஸ்டாட்டில் (It is the legistator's entire business to provide for the public interest through the unselfish interplay of the private interests of the citizens.) ஆளும் வகுப்பினரும் ஆளப்படும் வகுப்பினரும் பேராக்கம் கருதிப் பேதமின்றிச் செயல்புரியவேண்டும். "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்ற ஒற்றுமையுணர்வு ஒவ்வொருவர் சிந்தனையிலும் முகிழ்த்து மலர்ந்து மணக்க வேண்டுவது முற்றும் அவசியமாகும்.

புரட்சியைத் தவிர்க்கப் புரிய வேண்டுவது யாது?

குடிமக்கட்குப் போதிக்க வேண்டுவது அரசியலார் கடமை. கல்வித் துறையில் இளமை முதற்கொண்டே மாணவர்கட்குத் தேசபக்தியும் தெய்வபக்தியும் உண்டாக்கப்பட வேண்டுவது இன்றியமையாத ஒன்று. அவர்கட்கு உள்ளதைக்கொண்டு திருப்தி அடையும் உள்ளம் உண்டாக்கப் படல் வேண்டும் – இப்படி நற்போதனைகள் செய்வதன் மூலம், பிரகாசம் பொருந்திய, செல்வாக்கு மிக்க, கூட்டுறவான, திருப்திமிக்க குடிமைத் தம்மையை மக்களிடைய பரவலாக மலரச் செய்ய முடியும் என்பது அவர் கோட்பாடு.

ஆளும் வகுப்பினர், ஆளப்படுபவர் திருப்தியையே (The contentment of the ruled) குறிக்கோளாகக் கொள்ளுதல் வேண்டும். நீதிமுறையாலே நிம்மதியை (Contenment through justice) நிலைநாட்ட வேண்டும். இந்த முறையைப் பின்பற்றினால் இழிநிலை தரும் புரட்சியைத் தவிர்க்கலாம். அநீதி ஆட்சியை எவரும் ஆமோதித்து அமைதியாக இருக்கமாட்டார்கள். ஒரு காலத்தில் அதுபுரட்சி உருவெடுத்துப் பொங்கிவழிந்து சீரழிக்கும். குடிமக்கள் பால் நேசத்தையும் நேர்மையையும் கடை பிடித்தால், புரட்சி என்னும் புயல் வீசாமல் காக்கலாம். அதற்கு ஜனநாயகம்

வாய்ப்பானது. என்றாலும் முன்குறிப்பிட்ட மாறுபாடு (Perversion) வாராமல் மதித்து ஆளவேண்டும். புரட்சி, சர்வாதிகார ஆட்சியில் சகஜமாக ஏற்படும் என்கிறார் அரிஸ்டாட்டில். உதாரணம் ரஷியா போன்ற சர்வாதிகார நாடுகள். சர்வாதிகார நாடுகள் எளிதில் உடையக் கூடியவை என்றும் கூறுகிறார். (Dictatorship are the most fragile of governments)

இங்ஙனம் அரிஸ்டாட்டில் மிக விரிவாகத் தம் "அரசியல்" (Politics) என்ற நூலில் நவீன உலகிற்கும் பொருந்தும் கருத்துக்களை நல்குவது பெருவியப்பாகும்.

ஆதார நூல்கள்

Basic Teachings of Great Philosophers by S. E. Frost
Living Biographies of Great Philosophers by Thomos & Thomos
Philosophy Made Simple by Richard H. Popkin and Avrom Strole
Get to know Philosophy by Hugh Harris.
Student's History of Philosophy by Arthur Kenyon Rogers.
A History of Philosophy by Frank Thilly. (தொடரும்)

<u>மதிப்புரை</u>

பலன் தரும் திருமுறைப் பதிகங்கள்

[தொகுத்து வெளியிட்டவர் :- திருமுறைத் தொண்டர் திரு. நா. இராமமூர்த்தி, 5, மூன்றாவதுதெரு, போஸ்டல் காலனி, மேற்குமாம்பலம், சென்னை-33. பக்கங்கள்: 142. விலை ரூ. 5—00]

பலன் தரும திருமுறைப் பதிகங்கள் என்ற அமைப்பில் 34 பதிகங்களைத் தொகுத்துப் பதிப்பித்துள்ளார். தருமை 25 ஆவது ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகள் திருவடிகட்குச் சமர்ப்பிக்கப்பெற்ற இந்நூல், தருமை 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ ஆசியுரையுடன் இனிது மலர்ந்துள்ளது. பதிகம் பாடப்பெற்ற வரலாறு, கிடைக்கும் பயன், பதிகப்பாடல்கள், பதிகம் பாராயணம செய்த அன்பர்கள் பெற்ற பயன்பாடு - முதலியவைகளுடன் நூல் நன்முறையில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. அன்பர் திரு. இராமமூர்த்தி அய்யர் திருமுறைகளின் பயன்கள் பற்றித் திடநம்பிக்கையுடன் ஆற்றும் தொண்டு பாராட்டத்தக்கது. இந்நூலைத் தருமை ஆதீனம் ஸ்ரீசொக்கநாதர் வழிபாட்டில் ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் வெளியிட்டருளியது, திருமுறைத் தொண்டரின் தொண்டுக்கு ஆசி வழங்குவதாக அமைந்தது. அன்பர்களின் இல்லங்கள்தோறும் இலங்கவேண்டிய நன்முறையில் பதிப்பிக்கப்பெற்ற அரிய இனிய பாராயண நூல் இது; சமயசஞ்சீவி!

— கா. ம. கண்ணப்பன்,
தருமபுரம்.

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் ஆலயவழிபாடு விபவ - கார்த்திகை 14 (29—12—88) செவ்வாயன்று குத்தங்குடி திருக் கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெற்றது. இத்தலம் ஸ்ரீ திருஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகத்தில் இடம்பெற்ற வைப்புத்தலமாகும். தலச்சிறப்புக்களை விளக்கித் தருமை ஆதீனப் புலவர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., உரையாற்றினார். பக்தர்கள் விழாவில் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில் ஆங்கிலமாத முதல் ஞாயிறு தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம்பெறும் பிரார்த்தனைக் கூட்டம் நிகழ்ந்துவருகின்றது. இம்மாதம் 91 ஆம் அருளுபதேசம் 1—1—89 அன்று திருமுறைப் பாராயணத்துடன் தொடங்கிச் சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் கழறிற்றறிவார் **நாயனார்** புராணம் உபதேசிக்கின்றார்கள். சிதம்பரம் தரிசிக்கவும் சுந்தரரைக் கண்டுதொழவும் போந்த சேரமானார் திருவாரூரில் சின்னாள் தங்கியிருந்தபின் மதுரை சென்று வழிபட எண்ணிப் புறப்பட்டார். இவ்வெண்ணம் 'மதிமலிபுரிசை' எனும் திருமுகம் அருளித் தன்னை நினையத் தந்த இறையருளால் நிகழ்ந்தது. சுந்தரரும் சேரமானும் வேதாரணியம் (திருமறைக்காடு) தரிசித்தபோது - பாண்டிநாடு செல்லும் எண்ணம் தோன்றிற்று. சம்பந்தர் திருமறைக்காட்டில் தரிசித்தபோது மானியார், சம்பந்தரைக் கன்னிநாடு வருமாறு அழைப்பித்தமையோடு இதனை ஒப்பிட்டுச் சிறப்பு உணர்த்தினார்கள். பல தலங்களையும் வணங்கிச் சுந்தரரும் பாண்டி நாடு எய்தியமை வரை உபதேசித்தார்கள்.

தருமை ஆதீன அடியவர்கள், அலுவலர்கள், அன்பர்கள் ஆசிரியர்கள் முதலியோர் அருளுபதேசம் கேட்டுப் பயன்பெற்றனர்.

அடுத்து 92 ஆம் அருளுபதேசம் (5—2—89) அன்று நடைபெறும். அன்பர்கள் கலந்து கொண்டு பயன்பெறுவார்களாக.

திருப்பொன்னூசல் விழா

வேளூரில் :

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்திய நாத சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ தையல்நாயகி உடனுகிய ஸ்ரீ வைத்தியநாத சுவாமிக்குக் கார்த்திகைத் திங்கள் 30 ஆம் நாள் (15—12—88) வியாழக்கிழமை முதல் பத்து நாட்கள் திருப் பொன்னூசல் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்நாளில் பெருமானேயும் பெருமாட்டியையும் திருப்பொன்னூசலில் எழுந் தருளச் செய்து சிறப்பாக வழிபாடுகள் நிகழ்த்தப்பெற்றன. திருவெம்பாவைப் பாடல்கள் ஓதப்பெற்றன. (24—12—88) சனிக்கிழமை திருவாதிரை நாளன்று ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் தரிசனமும் நடைபெற்றன. அன்பர்கள் தரிசித்தும் பயனடைந்தனர்.

சீகாழியில் :

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில் 15—12—88 வியாழக்கிழமை முதல் பத்து நாட்கள் ஊஞ்சல் திருவெம்பாவை உற்சவம் சிறப்பாக நடை பெற்றது. திருவெம்பாவை ஓதப்பெற்றது. நாள்தோறும் மாலையில் சுவாமி அம்பாள் வலம் வருதலும் காலை மாலை இருவேளைகளிலும் பிராகாரத்தில் ஸ்ரீ மாணிக்கவாசகர் வலம் வருதலும் ஓதுவா மூர்த்திகள் திருவெம்பாவை ஓத தீபாராதனை நிகழ்தலும் ஆகியன சிறப்பாக நடைபெற்றன. 23—12—88 வெள்ளியன்று இரவு திருவாசகத்தின் ஒரு பகுதியாகிய திருப்பொன்னூசல் ஓதப்பெற்றுத் தீபாராதனை நிகழ்ந்தது. திருவாதிரை நாளில் ஸ்ரீ நடராஜப்பெருமான் திருவுலாக்காட்சி சிறப்பாகநடைபெற்றது.

திருவெம்பாவை விழா

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான சீகாழி, திருப்பனந்தாள், திருவையாறு, திருபுவனம், திருக்கடவூர், வைத்தீசுவரன்கோயில், பேரளம் ஆகிய தலங்களில் ஸ்ரீ நடராசப் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடும், திருவெம்பாவை விழாவும் நடைபெற்றன.

தக்க புலவர்கள்பலரைக்கொண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்து விக்கப்பெற்றன. அன்பர்கள் வந்திருந்து கண்டும் கேட்டும் பயன் பெற்றனர்.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்
ஓய்வுபெற்ற ஆசிரியர்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்

(விபவஸு தைமீ 1உ முதல் 29உ முடிய)
(14—1—89 முதல் 11—2—89 முடிய)

விபவஸு தைமாதம் 1௳ ஸ்திரவாரம் ரேவதி நக்ஷத்திரம் வணிசைகரணம் கூடிய காலத்தில் சூரியோதயத்திற்கு முன் தனுர்லக்னத்தில் ஸ்ரீலோகரட்சகரான சூரியபகவான் தனுர் ராசியினின்றும் மகரராசி சங்கிரமணமாக, தைமாதப் பிரவேசம் செய்தருளுகின்றார். அன்று உத்திராயண புண்ணியகாலம். சங்கிரமண பலன் உலக பிரஜைகளுக்கு சத்துரு இருணரோக பலனை ஏற்படுத்துவதாக இருப்பினும் சங்கிரமண காலகிரக ஸ்திதி கிரகமாலிகையானதால் உலக பிரஜைகளுக்கு தொழில் வாழ்க்கை நலன்கள் பலவாக ஏற்படும். மக்கள் சம்பொருளாதாரம் அடைந்து உழைப்பு உடையவர்களாகி ஆக்கம் பெறுவர். மருத்துவ வசதியாவர்க்கும் கிடைத்து நலம் பெறவும் இயற்கை சீற்றத்தை சமாளிக்கவும் இறைவனருள் ஏற்படும். அரசு செங்கோல் ஆட்சி புரிந்து பரமமாகப் பரந்த நோக்கில் எல்லா பிரஜைகளையும் இரட்சித்து வரும். ஆன்றோர்களால் தெய்வ புண்ணிய காரியங்கள் தர்மங்கள் தேசங்களில் ஆங்காங்கு நடந்து கொண்டிருக்கும். உலகமெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் இறைவன் கட்டளையில் வந்து திருவீற்றிருக்கின்ற சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் ஜெகத் குருமகான்கள் உலகத்திற்கு தர்மகர்மாதிபதிகள் நன்கு அமைந்திருப்பதின் விசேஷத்தால் வித்தியா தானமாகத் தேசங்களில் எங்கும் கல்விநிலையங்கள் வேதசாஸ்திர பாடசாலைகள் வெகுவாக ஏற்படுத்தி மாணுக்கர்கள் அப்பியசிக்கவும் உயர்கல்வியறிவுடன் வித்தகர்களாகித் திகழவும் அனுக்கிரகம் செய்தருள்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் சிறப்பொடு பூசனைகள் நடந்து வரும் எங்கும் சுபிட்சம் நிலவும்.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷ ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பணவருமானம் செந்நெல் பிராப்தி மிகுந்து வரும். வித்தியா வியாபாரதிகளில்

கலைத்துறையில் உத்தியோகம் ஆகியவற்றில் அரசு லிகிதம் வந்து கிரியைகள் நன்கு செயல்பட்டுக் கொண்டிருக்கும். வாகன சுகம் பசுபால் பிராப்தியில் அதிக சௌக்கியம் தரும். தெய்வதரிசனம், நல்லோர் பிரபஸ்தார் சந்திப்பு உன்னத நிலைமையாகும். ஜனவரி 31 பிப்ரவரி 1, 2 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீரிஷம் ½

ரிஷப ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். பண வருமானம் வரும். வித்வத்துவம் கலைத்துறையில் முன்னேற்றம் தரும். ஞானவழி அல்லது விஞ்ஞான ஆய்வில் சிந்தை செல்லும். யதார்த்ததில் ஓர் சிக்கல் அல்லது இழப்பு ஏற்படுகின்ற நிலையாயினும் நல்லோர் சகாயத்தால் அடுத்த ஆண்டு ஏற்படுகிற ஓர் அதிர்ஷ்டத்துக்கு சமமாக முன் கூட்டிய பலனை உண்டுபண்ணும். எல்லா அலுவல்களும் சீரிய முறையில் நடந்து கொண்டிருக்கும். தாரம்,புத்திரர்களின் சௌக்கியம் நன்ருகஇருந்துவரும். பிப்ரவரி 3, 4 தேதிகள் சந்திராஷ்டமம். புதன் வியாழன் சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுன ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். பொது நலச் செலவினங்களும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். ஜனவரி 30 மேல் பால் பிராப்தி விருத்தியும் புத்திரர் புத்திரிகளுக்கு சுபம் நிகழ்தலும் இருப்பிட சௌகரியம் புதிய வாகன பிராப்தியும் அளிக்கும். பிப்ரவரி 8 தேதிக்கு அரசாங்கத்தில் ஓர் உயர்வளிக்கும். லிகிதங்களில் தஸ்தாவேஜுகளில் நல்லனவாகும். பிப்ரவரி 5, 6, தேதிகள் சந்திராஷ்டமம் வெள்ளி, சனி சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் கெடியான தோரணைக்கு ஏற்பவந்துகொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் உத்தியோகத்தில் ஜனவரி 16உ மேல் சிறப்பு நிலைமையை உண்டுபண்ணும். கலை வல்லுனர்கள் அறிஞர்கள் சந்திப்பு நல்விஷய உரையாடலில் மகிழ்ச்சியாகும். முயற்சித்த எல்லாக் காரியங்களும் கெடியில் நன் மதிப்புடன் நடந்து கொண்டிருக்கும். தாரம்புத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். பிப்ரவரி 7, 8 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு திங்கள் சுபம்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்ம ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பண வருமானம் கணிசமாக வரும். வித்துவத்தும்கலைத்துறையில் உத்தியோகத்தில்

நன் மதிப்பும் உயர்பதவி வருவதலும் ஆகும். அரசு விதித அனுகூலங்களை உண்டுபண்ணும். இயந்திர வாகன பிராப்தியளிக்கும். பிப்ரவரி 8 தேதியில் ஓர் புத்திரபிராப்தி ஏற்படும். எல்லாக் காரியங்களும் சாஸ்திரோக்தபடி நல்லவிதமாக நடந்து கொண்டிருக்கும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். ஜனவரி 14, பிப்ரவரி 9, 10 தேதிகள் சந்திராஷ்டமம், செவ்வாய் புதன் சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியா ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். பண வருமானம் வரும், கால் சருக்குதல் போன்ற ஓர் விபத்து வந்து தப்பச்செய்யும் வீடு வாகனபிராப்தியில் நல்ல ஏற்பாடு நடக்கும். ஒப்பந்த லேவாதேவிகளில் நல்லன ஏற்படுதல். விகிதவிஷயங்களில் அனுகூலம் ஏற்படுதல் ஆகும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். எல்லாக்காரியங்களும் காலதாமதத்தில் ஆயினும் நீடித்த பலனுடையதாகும். ஜனவரி 15, 16 பிப்ரவரி 11 இத் தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன் வெள்ளி சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலா ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். பண வருமானம் வந்துநிறையும். வித்துவத்துவம் கலைத்துறையில் உத்தியோகத்தில் பிரபலமும் கூர்ந்த சித்தமாகச் செயலாற்றுதலும் ஆகும் பரோபகார நற்பணிகள் செய்யும். பொதுச்சொத்து நிர்வகிக்கும், வாகன பிராப்தி கட்டிட பிராப்தியில் நல்லசௌகரியம் இருந்துவரும். புத்திரருக்கு விசேஷ நன்மை ஏற்பட்டுக் கொண்டிருக்கும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வபக்தியில் நடந்து வரும். ஜனவரி 17, 18 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை

விருச்சிக ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் நல்லவிதத்தில் வந்துசேரும், நல்ல ஆபரணம் ஒன்று வாங்குதல் ஆகும். புத்திர பிராப்தி ஒன்று ஏற்படும். கலாசார சாஸ்திர சம்பிரதாயம் பேணும், தெய்வத் தன்மையில் உறுதியாக எல்லாக் காரியங்களும் செயல்படும். நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு நல்லன ஏற்படுதல் ஆகும். முயற்சித்தவை சித்திக்கும். வழக்குகளில் ஜெயம்தரும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்து வரும், ஜனவரி 19, 20, 21 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள் செவ்வாய் சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர் ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். பண வருமானம் கணிசமாக வந்துகொண்டிருக்கும். வித்துவத்துவம்

கலைத்துறையில் விருதுபெறுதல், புகழ்ந்து கடிதங்கள் வருதல், உத்தியோகத்தில் உயர்பதவி வருதல் ஆகும். நீர் ரோகம்போன்றவை குணமாகும். தாரம் புத்திரர்களின் நலம் நன்ருக இருந்து வரும். பொங்கு சனியாக உள்ளவருக்குநல்ல முற்போக்குத் தரும். ஜனவரி 22, 23, தேதிகள் சந்திராஷ்டமம் பிப்ரவரி 1, 2 தேதிகளில் நல்ல வகை செலவு. புதன் வியாழன் சுபம்.

10. மகரம் :- உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும் பண வருமானங் வந்துகொண்டிருக்கும். அதற்கேற்ப சுப நிகழ்ச்சி செலவினங்களும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். ஆயினும் அன்புக்குரியவர் அல்லது நெருங்கிய தொடர்புடையவர் மனஸ்தாபத்தில் சிறிதுகாலம் விலகிஇருந்து கொள்வர். ஓர்இக்கட்டான நிலை ஏற்பட்டு நல்லவர் சகாயத்தால் சமாளித்தல் ஆகும். ஜனவரி 31 ல நல்லசௌகரியம் கிரியா மேன்மை பிரபலஸ்தர்களால் அனுகூலம் ஏற்படச் செய்யும். ஜனவரி 24, 25 தேதிகள் சந்திராஷ்டமம். பிப்ரவரி 3, 4, தேதிகள் செலவினம். வெள்ளி சனி சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் $\frac{1}{2}$ - சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். பண வருமானம் வரும். பூமியில் இயந்திர சாதனங்களில் அபிவிருத்தி ஏற்படும். வித்துவத்துவம் கலைத்துறையில் உத்தியோகத்தில் உயர் ஸ்திதியளிக்கும். குலசம்பிரதாய நற்காரியம் செய்தல் அல்லது தெய்வ பூசனை விமரிசையாய் நடத்தும். ஸ்ரீவிக்னேஸ்வரர் அருளால் எல்லாக் காரியங்களும் நல்ல விதமாக நடந்துவரும். தாரம் புத்திரர்களின் நலம் நன்ருக இருந்து வரும். ஜனவரி 26, 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். பிப்ரவரி 5, 6 ல் புனித சாஸ்திரோக்த செலவு. ஞாயிறு திங்கள் சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி $\frac{1}{4}$ - உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் முன் கணிப்புப்படி வந்துசேரும். வாக்குறுதி பேணும். வித்துவத்துவம் கலைத்துறையில் அரசுதொடர்பு விஷயங்களில் மதிப்பும் விசேஷ நன்மைகளும் உண்டுபண்ணும். ஜனவரி 30 தேதி ஆனல் புத்திர பிராப்தியளிக்கும். குலதெய்வ பூஜைசெய்தல் புண்ணிய தீர்த்த பலபிராப்தியாகும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். பந்துக்கள் கூடுவர். ஜனவரி 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். பிப்ரவரி 7, 8 தேதிகளில் நற்கைங்கர்யம் செய்தல் ஆகும். செவ்வாய் புதன் சுபம்.

உ

குருபாதம்

சந்தாதாரர்களுக்கு ஓர் அறிவிப்பு

தருமை ஆதீனத்திலிருந்து திங்கள் தோறும் மலர்ந்து செந்தமிழ் மணமும் சிவமணமும் பரப்பி, சிவஞானத்தேன் வழங்கிக் கற்போர் கருத்தை வளர்த்து வருவது "ஞானசம்பந்தம்" 47 ஆண்டுகள் நிறைவு பெறுகிறது. 48 ஆவது மலர் ஆண்டுக் கட்டணத்தை உடன் செலுத்தக் கேட்டுக்கொள்கிறோம்.

சந்தாதாரர்கள் தொடர்ந்து ஆண்டுக்கட்டணம் செலுத்தியும், புதிய சந்தாதாரர்களாகச் சேரவிரும்புவோர் கீழ்க்காணும் முகவரிக்கு ஆண்டுக் ட்டணம் அனுப்பியும் சந்தாதாரர்கள் சந்தாவை உரிய காலத்தில் செலுத்தியும் உதவி புரிந்து உயர்வு பெறுவார்களாக. வேலை மிகுதியினுலோ அல்லது மறதியினுலோ ஆண்டுச்சந்தா செலுத்துவதில் தடை ஏற்படலாம். தடையில்லாமல் ஞானசம்பந்தம் பெற வாய்ப்பு அளிக்கும் முறையில் ஆயுள் சந்தா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆயுள் சந்தா அறிவிப்புச் செய்த 19—2—72 முதல் இன்றுவரையில் 1264 அன்பர்கள் ஆயுள்சந்தா செலுத்தியுள்ளனர். ஆயுள்சந்தா செலுத்தினுல் அவர்களது வாரிசுகளும் ஞானசம்பந்தம் பெற வசதி செய்து தரப்படும். மேலும் தமது ஆயுள் சந்தாவை மற்றவர்களுக்கோ கல்வி, அறநிறுவனங்களுக்கோ மாற்றிக்கொடுக்க விரும்பினுல் அதற்குரிய ஏற்பாடுகளும் செய்துதரப்படும்.

ஆண்டுச் சந்தா	[சந்தா விபரம்]	ஆயுள் சந்தா
உள்நாடு ரூ. 17—00		உள்நாடு ரூ. 175—00
சிலோன் உள்பட வெளிநாடு ரூ. 45—00		சிலோன் உள்பட வெளிநாடு ரூ. 450—00

தனிப்பிரதி விலை ரூ. 1—50

செயலாளர், ஞானசம்பந்தம் செயலகம்,
தருமபுரம், மயிலாடுதுறை 609001,
தஞ்சை மாவட்டம்.

குறிப்பு:- ஆயுள்சந்தா தொகை அனுப்புவோர் "ஞானசம்பந்தம் திங்கள் இதழ்" என்கிற பெயருக்கு டிராப்ட் எடுத்து அனுப்பக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

அனைத்துலக சைவசித்தாந்த
ஆராய்ச்சி நிறுவனம்

இதழ்வழிச் சைவ சமயக்கல்வி-IV

பாடம் - 12.

ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிகரின்
திருவருட்பாத் திரட்டுச் சிந்தனை :

கணபதியெனும் குணமேரு

வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ., எம். ஃபில்.,

ஆசிரியர் குறிப்பு :

அரன் நாமமே வையகமெங்கும் சூழவேண்டும் துயர்கள் நீங்கவேண்டுமென்ற தளரா விருப்புடைய தருமபுர ஆதீன சைவத் திருமடத்தின் கொலுபீடத்தைப் பத்தாமவராக வந்து அலங்கரித்தவர்கள் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள். இவர்கள் ஸ்ரீ குருஞானசம்பந்தர் ஏற்றிய தீபத்தைக் குன்றினுச்சிக்குக் கொண்டு சென்று விளங்க வைத்த முயற்சியாளர்.

வான்பொய்ப்பினும் தான்பொய்யா மலைத்தலைய கடற்காவிரி தவழ்ந்து வரும் தருமையில் ஞானச் செங்கோலோச்சி வரும் நாளில், தலயாத்திரை செய்யத் திருவுள்ளம் பற்றினார்கள். யாத்திரையைப் புள்ளிருக்கு வேளூரிலிருந்து தொடங்கியதால் ஸ்ரீ செல்வமுத்துக்குமரனுக்கு ஒரு செந்தமிழ்ப் பாமாலை கிடைத்தது. சிகாழியின் சட்டைநாதப்பெருமானையும் பாடிப் பணிந்தார். பின் தில்லையில் சிதம்பர நடேசர் பற்றிப் பாடி மகிழ்ந்தார். அதன்பிறகு தம் குருவிற்கும் குருவாக இருந்தவர் வாழ்ந்த தலமான திருவாரூர் வந்து - பெருமானின் அசபா நடனத்தைப் போற்றிப் பாடியதோடு சித்தீச்சரம் ஸ்ரீ தட்சிணாமூர்த்தியின் மேலும் திருவருட்பாப் பாடிப்பரவினார்.

சிலநாட்களுக்குப் பின் தென்னக யாத்திரை செய்யத் திட்டமிட்டு மதுரை வந்தார். ‡ தமது வழிபடு தெய்வமும் ஆன்ம நாயகருமான 'சொக்கநாதன்' - கண்ணுக்கினிய பொருளாய்-

---

‡ ஸ்ரீ சொக்கநாதசுவாமி திருவருட்பா எழுந்த சமயம் இதுவாகவே அமையும்.

தம் குருநாதர் கரத்தில் வந்த எளிமையை நினைந்தார். ஆராக் காதலால் பொங்கி வந்த உணர்வை - தமிழ்த் தொடையலாக்கிப் பெருமானுக்குச் சார்த்தி அஞ்சலி செய்தார்.

மதுரையில் இருந்தநாளில் தொழுநோயாளி ஒருவனின் நோய் நீங்கக் கடைக்கண்ணால் அருள்செய்து - காளையார் கோயி வில் உள்ள தீர்த்தத்தில் மூழ்கி வர ஆணையிட்டார். அப்படியே செய்து அவன் நோய் நீக்கம் பெற்றான். பின்னர்த் திருச்செந்தூர் செல்லத் திருவுளங்கொண்டு புறப்பட்டு - அவ்வூரை நெருங்கும் நேரத்தில் - அவ்வூர்ப் போற்றிமார்கள் இவரது சிவிகையைத் தடுத்தனர். பகலில் தீவர்த்தியுடன் பல்லக்கில் செல்லக்கூடாது. என விவாதிக்கும் நேரத்தில் செந்திலாண்டவனே அர்ச்சகரின் வடிவில் வந்து சுவாமிகளின் பெருமையைக்கூறிப் போற்றிமார் களை வாயடைக்கவும் செய்தான். வழிபாடு முடித்துத் திரும்பி வந்த சுவாமிகளைப் பின்னே போற்றிமார்கள் வணங்கித் திருநீறு பெற்று வாய்ப்பேசும் திறம் பெற்றனர். மலைநாட்டரசன் துங்கன் தன்மகளைப் பற்றியிருந்த பிரம்மராக்கத நோயை, சுவாமிகளின் பெருமை கேட்டறிந்து வந்து வணங்கிப் போக்கிக் கொண்டான். தனது நன்றியறிதலைக் காட்டும் வகையில் நிலங்கள் பலவற்றை இறையிலியாகத் தந்தான் இவ்வாதீனத்திற்கு.

வெற்றிகரமாக யாத்திரையை முடித்துத் தருமை வந்த பின் ஒருநாள் பிரமராக்கத மொன்று வந்து சுவாமிகள் திருவடிகளில் விழ - இது துங்கன் மகளைப் பற்றியிருந்த பிரமராக்கதமே யென்றுணர்ந்து, அதன் விண்ணப்பம் என்ன என்பதைக் கேட்டார் கள். தனது தீயவுரு நீங்கவும் மேல்கதி அடையவும் அருள் செய்ய வேண்டுமென்று அது விண்ணப்பிக்க - அப்படியே தனது அனுட்டான பலனை அதற்குத் தந்துதவினார்கள். அது முதல் இவ்வாதீனத் தலைவர்கள் ஒருகால அனுட்டானம் அதிகமாகச் செய்து வருகிறார்கள்.

வான்வழி சென்ற சித்தரை விரலால் அழைத்து நீறளித்துக் கதியளித்தார். சித்தர் வந்திறங்கிய சித்தர் கட்டு இன்றும் திரு மடத்தில் இருக்கிறது. வேளாளர்குலப் பெண்ணொருத்திக்குச் சிவதீட்சை தந்து 'முதிரா அவ்விளம் பிஞ்சை நற்கனியாக்கி' - அற்புதம் நிகழ்த்தினார். இறந்த தன் தந்தை முத்திபெற - ஒருவர் வந்து விண்ணப்பித்தார். தம் குருநாதரின் பெருமையை உலகம் அறியவும் இது ஒரு வாய்ப்பு என எண்ணியவர் போல ஸ்ரீ ஞான புரீஸ்வரர் கோயிலை மனைவியுடன் வழிபட்டு வாருங்கள் என்றார். அவர்கள் அப்படியே செய்ய வாக்குப்படி - இவர் அவர் தந்தை முத்தியுலகடைந்த விபரம் கூறி மகிழ்வித்தார்.

சில ஆண்டுகளின் பின் காசியாத்திரை செய்யும் அவா திருவுள்ளத்திலெழுந்து அங்குச் சென்று தரிசித்து, துண்டிராஜர் – விசுவநாதர் – அன்னபூரணி – கேதாரநாதர் – காலபைரவர் – (கதிர்காம) வேலவர் – கேதார கௌரி, காசி விருத்தகாளேச்சரி போன்ற தெய்வங்கள் பேரிலும், பாகீரதியம் கங்கை, அங்கு உபதேசிக்கப்படும் தாரக மந்திரம் என்ற இவற்றின் மேன்மையை யும் நினைந்து பாடல்கள் பாடியருளினார்கள்.

பின் தருமை மீண்டு சில ஆண்டுகள் அருட்செங்கோல் செலுத்திப் பின்வந்த சச்சிதானந்த தேசிகருக்கு ஞானபீடகம் செய்துவிட்டு ஐப்பசி மாத கிருட்டினபக்க பத்தாம் நாள் முத்தி நிலையடைந்தார்கள். இவர்களைத் 'தருமபுர ஆதீனத்துச் சந்நியாசி துண்டிராஜ கணபதி திருவருட்பா முதலியவை பாடினவர்' என்று அபிதான சிந்தாமணியில் காட்டியிருக்கிறார்கள். இவர்கள் காலம் கி.பி. 1740 என இருக்கலாம் என்கிறார்கள். இவர்கள் அருளியுள்ள பதிகங்கள் பதினாறும். ஸ்ரீ காசி சம்பந்தமான பத்துப் பதிகங் களும், சிதம்பரம், திருவாரூர், சீகாழி, வேலூர், மதுரை சம்பந்தமான ஆறு பதிகங்களும் இப்போது காணக் கூடியனவாக உள்ளன. நால் திருவருட்பாத்திரட்டு என்ற பெயருடன் உள்ளது. எடுத்தகாரியம் இனிது விளக்கம் பெறும் நோக்கில் முதல் பதிகம் கணபதிப்பெருமான் மேலேயுள்ளது.

பத்துப் பாடல்களின் பொருளமைப்பும் கீழே காணுமாறு உள்ளன.

1. வடிவச்சிறப்பு. 2 ஆற்றலின் பெருமை. 3. தகுதிக் குறிப்பு. 4. விண்ணப்பம். இதே அமைப்பில் இக்கட்டுரையும் அமைகிறது.

துண்டிராஜ கணபதி என்னும் ஸ்ரீ காசியில் உள்ள விநாயகர் பதிகம் ஆதலால் அதுகுறித்த விபரம் முன்னே சிந்திக்கப்படுகிறது. துராசரன் என்ற அசுரனைக்கொல்வான் வேண்டிப் பார்வதிதேவி ஐந்து முகங்களும், பத்துக் கைகளும் கொண்டிருக்க அவ்வடிவி லிருந்து அப்படியேயான விநாயகர் அவதரித்து அவ்வசுரனை அழித்தார். அதனால் வக்ரதுண்டர் என்றும் துண்டி விநாயகர் என்றும் பெயர் பெற்றார்.

வடிவச் சிறப்பு :

சிறப்புடைய நாயகன் என்ற பொருளும், தனக்குமேல் தலைவன் இல்லாதவன் என்ற பொருளும் விநாயகர் என்ற பதத்திற்கு அமையும்.

அவர் திருமேனி இடையின் கீழே பூதஉடம்பு: இடைக்கு மேல் கழுத்துவரை தேவ உடம்பு; தலை மிருகத்தலை; ஒருகொம்பு

ஆண் தன்மை; கொம்பில்லாத பகுதி பெண் தன்மை; யானைத் தலை அஃறிணை; தெய்வ சரீரம் உயர்திணை. இவ்வாறு எல்லாம் ஆய திருவுருவம் அவருடையதாகிறது.

பூதமாய், தேவராய், விலங்காய், ஆணாய், பெண்ணாய், உயர் திணையாய், அஃறிணையாய் எல்லாமாய் விளங்குபவர் விநாயகர்.

பருத்த வயிறு அகில உலகத்தையும் அடக்கிக்கொண் டிருப்பதன் அடையாளம், கும்பம் ஏந்தியகரம்-ஆக்கல் தொழிலை, மோதகம் ஏந்திய திருக்கரம்-காத்தல் தொழிலை, அங்குசம் ஏந்திய கை-ஒடுக்கல் தொழிலை, பாசம் ஏந்திய கரம்-மறைதல் தொழிலை, தந்தம் தாங்கிய கரம் - அருளல் தொழிலைச் செய்வதால் ஐந்தொழிக்கும் இவர் நாயகனுவார்.

அருட்கருணையை நிதியாக்கொண்ட இவர் ஓங்காரவடிவான பாதத்தாமரைகளை, அவற்றின் மேல் இரண்டான வேதச் சிலம்பு களைப் பெற்றிருக்கிறார். உதிக்கும் கதிரவன் ஒரு கோடி சேர்ந்தா லென ஒளியும், நீரின்றிப் பூசிய நீற்றின் ஒளியும், அழகாயமைந்த யானை முகமும், தும்பிக்கையும், வளருகின்ற தோள்களாகிய பவளக்குன்றங்கள் நான்கும், பாசம்,அங்குசம், கொம்பு,மோதகம் இவற்றைப் பரிவொடு தாங்கிய கைகளும், விடாத கருணைமழை பொழியும் முக்கண்ணும், நிறைந்த மும்மதமாம் மழையும் நீண்ட சடைக்காடும், அதில் வெண்பிறையும், ஒப்பற்ற தொந்தியும் கொண்ட இத்தோற்றத்தினை நெஞ்சில் வைப்பேன் - ஒருக்காலும் மறவேன் என்கிறார் ஸ்ரீ சிவஞானதேசிகர்.

ஓங்கார வடிவான உன்பாத தாமரையும்
உபயபரி புரமறைகளும்
உதிக்கின்ற செங்கதிர்கள் ஒருகோடி நிகரொளியும்
உத்தூள நீற்றி னொளியும்
பாங்கார் கசானனமும் முககரமும் வளர்புயப்
பவளா சலங்கள் நான்கும்
பாசமுட னங்குசம் கொம்போ ரிலட்டுகம்
பட்சமொடு வைத்த கரமும்
நீங்காத அருள்மாரி பொழியும்திரி யம்பகமும்
நிறையுமும் மதமாரியும்
நீள்சடா டவியும்வெண் பிறையும்ஒரு தொந்தியும்
நெஞ்சில்ஒரு காலும் மறவேன்
காங்கேயன் மகிழ்தமைய னேகங்கை நதிபெருகு
காசிவாழ் துண்டிராச
கணபதி யெனும்பெரிய குணமேருவே அருட்
கருணை நிதிக் கடவுளே.

ஆற்றலின் பெருமை :

கயிலைக்கிரியும் மேருமலையும் கொம்புகளாக, அனந்தனைக் கங்கணமாகக் கொண்டவர். தீ,இரவி,மதி இவற்றைக்கண்களாகக் கொண்டவர். மகாசலதிகளே மும்மதநீர். சண்ட மாருதம் அவர் காதசைவால் எழும். சக்ரவாளகிரியே நீள்துதிக்கை. பரிபாகரி கனைக் கொண்டு குற்றேவல் கொள்கின்ற பரப்பிர்ம மத்தகஜ மென்ற விநாயகர், கன்னெஞ்சுடை என் மலக்காட்டை முரிக்காதது ஏன் என்கிறார். நெஞ்சில் நிறைவான திரோதானகோபத்தை நீ நீக்கி என் தற்போதமாம் நிறைகவளத்தை அருள்வாயினால் உண்டு மகிழ வேண்டுகிறேன் என்கிறார்.

உள்ள மெனும் கூடத்தி லூக்கமெனுந் தறிநிறுவி யுறுதியாகத்
தள்ளரிய அன்பென்னுந் தொடர்பூட்டி யிடைபடுத்தித் தறுகட்
[பாசக்
கள் ளவினைப்பசுபோதக்கவளமிடக் களித்துண்டுகருணையென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை நினைந்துவரு வினைகள்
[தீர்ப்பாம்

— திருவிளையாடற்புராணம்.

ஆக இவரைத்தவிர, பிற தெய்வங்கள் பால் சென்று இரத்தல் வேண்டா, என்ற இவரது கொள்கைப் பிடித்தம் நூலில் வெளிப்படையாகவே தெரிகிறது.

தருநிக் குறிப்பு :

பதினெண் கணங்களுக்கும் தலைமையுடையவராக இவரைக் கொள்வதால் இவரைக் கணங்களின் பதியாக, 'கணபதி' என்று அழைக்கிறோம்.

மாலயன் அறியாத மகாதேவனும், இந்திரன் முதலான முப்பத்து முக்கோடி தேவர்களும், முனிவர்களும், பாம்பணையில் துயில்வோனும், பிரம்மதேவனும், திசைநாயகர்களும் காரியம் தொடங்கு முன் உவப்பொடு தங்கள் சென்னி உபயகர மேற் கொண்டு குட்டிக்கொண்டே தொழில்கள் தொடங்குகின்றார்கள் என்றால் இவர்பெருமை அளவிட முடியாதென்பது விளங்குகிறது.

விண்ணப்பம் :

இவர் ஆர்வமெல்லாம் கங்கையில் மூழ்கிடவும், விநாயகர் தரிசனம் காணவும், மெய்யடியார் ஏவல் செய்து மகிழ்வதிலும் நிறைந்திருந்தது. உன் திருவடித் தாமரையை நம்பினேன் நீ அலால்திக்கு வேறில்லை உனைமறவாத ஆனந்த வாழ்வன்றி அமரர் வாழ்வும் விரும்பேன். பரிபாகமில்லாத நான் வாரணாசியில் புகழப் படும் மணிகன்னிகைப் பாரேதிக்குள்ளே நாயாகப் பிறந்தாவது

மெய்ப் பாரத்தை அங்கே போக்கவேண்டும்; அதற்கே நீ அருள் செய்ய வேண்டும் என்ற விண்ணப்பம் கடைசி மூன்று பாடல்களிலும் இழையோடி இருப்பது காணலாம்.

காசியின்பெருமை, மானிடப்பிறப்பின் அருமை, அப்பேற்றின் புனிதம் நூல் முழுமையும் இழையோடும் அருமை காணக்கூடியதாயுள்ளது.

விநாயக வழிபாடு :

மிகத்தொன்மையான இவ்வழிபாட்டைப்பல்வேறுஇலக்கியங்களும் புராணங்களும் வலியுறுத்துகின்றன.

மணிமேகலையில் 'கரகங் கவிழ்த்த காவிரிப்பாவை' என்ற குறிப்புக் காவிரியின் உற்பத்தியுடன் விநாயகர் செய்த தந்திரமும் கூறுவதாயுள்ளது.

கந்தபுராணம் இந்திரனுக்காக விநாயகர் காவிரி கொண்டு வந்ததைச் சுட்டும். இவ்வரலாறு பிரபுலிங்கலீலையில்.

" சுரகுலாதிபன் தூய்மலர் நந்தனம்
பெருக வார்கடல் பெய்த வயிற்றினேன்
கரக நீரைக் கவிழ்த்த மதகரி
சரணம் நாளும் தலைக்கணி யாக்குவாம்"

என்று குறிக்கப் படுகிறது.

தொல்காப்பியம் சொல்லதிகார சேனாவரையர் உரை

" தன்தோள் நான்கின் ஒன்றுகைம் மிகூஉம்
களிறுவளர் பெருங் காடாயினும்
ஒளிபெரிது சிறந்தன் றளியஎன் நெஞ்சே "

என்பதைச் சுட்டுகிறது. நச்சர் தம் உரையில்,

" தடந்தாட் கொத்த தமனியச் சிலம்பு
படந்தாழ் கச்சைப் பாம்பொடு மிளிர
வென்றுடு திருத்தாதை வியந்துகை துடிகொட்ட
நின்றுடு மழகளிற்றை நினைவாரே வினையிலரே "

என்று குறித்திடும் திறம் இங்கே நோக்கற்குரியது.

அருளிச் செயல்கள் :

ஔவையாருக்குக் கயிலைசேரும் வாய்ப்புத்தந்தமை - பாரதம் எழுதினமை - முருகப் பெருமானை வள்ளியோடு இணைவித்தமை நம்பியாண்டாரின் பூசனை ஏற்றுத் திருமுறைகளை வெளிப்படுத்தியமை போன்ற செயல்கள் திருப்புகழ்களாகப் பாடப்படுகின்றன

வழிபாடு :

அவருக்குப் பிடித்த அறுகம்புல்லால் பூசித்து, அப்பம் அவல் பொரி இவற்றை நிவேதிக்க விரும்பியவெல்லாம் அவர் தருவார்.

இக்கவரை நற்கனிகள் சர்க்கரை பருப்புடனெய்
எட்பொரி யவற்றுவரை இளநீர்வண்
டெச்சில்பய றப்பவகை பச்சரிசி பிட்டுவெள
ரிப்படி மிடிப்பல்வகை தனிமூலம்
மிக்கஅடி சிற்கடலை பட்சணமெனக் கொளொரு
விக்கின சமர்த்தனெனும் அருளாழி
வெற்ப குடிலச் சடில விற்பரம ரப்பரருள்
வித்தக மருப்புடை பெருமாளே.

— திருப்புகழ்

சைவசித்தாந்த சாரம் :

பதி ஒருவன் பசுக்கள் அவனை அடைய முடியாத படி தடுப்பது பாசமே. பாசவினை நீக்கமுற இறையருளால்தான் நிறைவேறும் என்பது நம்சாத்திர மரபு. அப்படியான ஆணவமறைப்பை அருள் சக்தியால் நீக்குக என்ற குறிப்பு - ஆசிரியர்வாக்கில் 'என் தற் போதமாம், நிறைகவளம் அருள்வாயினல் உண்டு கர்ச்சித்து நீ மகிழ்வதென்றோ' என்று உருக்கொள்கிறது.

இறைதத்துவம் மண்முதல் நாத தத்துவங்களாய் அமைந்த விதத்தை (உலக அமைப்பு) 'மண்ணாதி நாதாந்தமான தேகாதிப் பிரபஞ்சம்' என்பதாகக் குறிக்கிறார்.

பாச மயக்கத்தை 'பகலிலே இருளில் மூழ்கிக் கிடப்பது' என்பார். 'யான் என்றும் எனதென்றும் உன்னிலையை நாடியும் ஏங்கிடார் படல் நீதியோ' என்று பேசுவார்.

இப்படிப் பல்வேறு அனுபவக் கருவூலமாக நூல்விளங்கும் அமைப்பு எண்ண எண்ண இன்பம் தருவதாகும். அதற்கொரு எடுத்துக்காட்டாக இம்முதல் பதிகம் அமைந்தது என்பதில் ஐயமில்லை.

அறிவுலகம் சுவைதேர்ந்து தெளிய இந்நூல் நல்விளக்காய் அமைந்துள்ளது.

ஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் அருளிய திருவருட்பாக்கள் :

1 ஸ்ரீ காசி துண்டிராஜ கணபதி திருவருட்பா
2 ஸ்ரீ காசி விசுவநாதர் திருவருட்பா
3 ஸ்ரீ கேதாரநாதர் திருவருட்பா
4 ஸ்ரீ காசி விருத்தகாளேச்சுரர் திருவருட்பா
5 ஸ்ரீ காசி காலவைரவர் திருவருட்பா
6 ஸ்ரீ காசி தாரகப்பத்து
7 ஸ்ரீ காசி அன்னபூரணியம்மை திருவருட்பா
8 ஸ்ரீ காசி கேதாரகௌரியம்மை திருவருட்பா
9 ஸ்ரீ காசி பாகீரதியம்மை திருவருட்பா
10 ஸ்ரீ காசி கதிர்காமவேலவர் திருவருட்பா
11 ஸ்ரீ சிதம்பர நடேசர் திருவருட்பா
12 ஸ்ரீ அசபா நடனப் பதிகம்
13 ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி திருவருட்பா
14 ஸ்ரீ ஆபதுத்தாரணர் மாலை
15 ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசாமி திருவருட்பா
16 ஸ்ரீ சொக்கநாதசுவாமி திருவருட்பா

திருத்தருமை ஆதீனம் பத்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளிய மேற்கண்ட நூல்கள் இனிய சந்த அமைப்பும் உயரிய சித்தாந்தக் கருத்துக்களும் கொண்டவை. அன்பர்கள் அனைவரும் கற்று நலம்பல பெறத் தக்கவையாக அமைந்துள்ளன.

சிவமயம்

தை மாதச் சிறப்பு நாட்கள்

14— 1—89 சனி, தனுர் பூஜை பூர்த்தி. உத்தராயண புண்யகாலம், திருவையாறு மாதப்பிறப்பு. சீகாழியில் ஸ்ரீ உமா மகேசுவரருக்கு உச்சிக்காலத்தில் புழுகாப்பு. மகர சங்கராந்தி, பொங்கல் பண்டிகை.

15— 1—89 ஞாயிறு, கணுப்பண்டிகை, மாட்டுப்பொங்கல்.

16— 1—39 திங்கள், கன்னிப்பொங்கல். கிருத்திகை விரதம்.

17— 1—89 செவ்வாய், வேளூர் கிருத்திகை. தருமை ஸ்ரீ சண்முகர் அபிஷேகம்.

19— 1—89 வியாழன், பிரதோஷம். ஸ்ரீ கண்ணப்ப நாயனார் குருபூஜை.

20— 1—89 வெள்ளி, வேளூர் கற்பகவிநாயகர் தைமாத உற்சவ ஆரம்பம். ஸ்ரீ அரிவாட்டாயநாயனார் குருபூஜை.

21— 1—89 சனி, பௌர்ணமி விரத பூஜை. தேன் அபிஷேகம் கும்பாயனம் 26-07.

23 — 1—89 திங்கள், ஆயில்ய விழா.

25— 1—89 புதன், சங்கடஹர சதுர்த்தி.

26— 1—89 வியாழன், குடியரசு தினம். ஸ்ரீ சண்டேச நாயனார், ஸ்ரீ திலகவதியார் குருபூஜைகள்.

27— 1—89 வெள்ளி, குருபெயர்ச்சி; பின்னிரவு விடியல் 5- 12 மணி. தருமை ஆதீனம் 15 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகள் குருபூஜை.

29— 1—89 ஞாயிறு, காளாஷ்டமி. வேளூர் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி தைமாதக் கடைச்செவ்வாய் உற்சவம் ஆரம்பம், காளாஷ்டமி.

30— 1—89 திங்கள், ஸ்ரீ தாயுமானவர் சுவாமி மௌனகுரு சுவாமிகள் குருபூஜை. ஸ்ரீ திருநீலகண்ட நாயனார் குருபூஜை.

3— 2—89 வெள்ளி, பிரதோஷம்.

4— 2—89 சனி, மாதசிவராத்திரி.

5— 2—89 ஞாயிறு, போதாயன அமாவாசை. சிரவண விரதம்.

6— 2—89 திங்கள், சர்வஅமாவாசை. மஹோதய புண்யகாலம்.

7— 2—89 செவ்வாய், வேளூர் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்குத் தைமாதம் கடைச்செவ்வாய் உற்சவதீர்த்தம். திருக்கடவூர் முனீஸ்வரபூஜை. ஸ்ரீ அப்பூதி அடிகள் குருபூஜை.

9— 2—89 வியாழன், சதுர்த்தி விரதம்.

10— 2—89 வெள்ளி, ஸ்ரீ கலிக்கம்ப நாயனார் குருபூஜை.

11— 2—89 சனி, சஷ்டி விரதம் மாசிமக உற்சவ ஆரம்பம்.

12— 2—89 ஞாயிறு, விஷ்ணுபதி ரதசப்தமி. திருவையாறு தீர்த்தம். கும்பரவி 23-26.

GHANASAMBANDAM
Regd. No. TN / M. M. 1
வெளிநாடு Regd. No. TN / M. Σ. 4

தருமை ஆதீனம்

ஞானசம்பந்தம் பதிப்பகம் வெளியீடுகள்

விலைப் பட்டியல் - 5

1.	திருமுதுகுன்றத் திருப்பதிகங்கள் ரூ.	2—30
2.	திருஇடையாறு திருவெண்ணெய்நல்லூர்த் திருப்பதிகம்	1—30
3.	திருவக்கரைத் திருப்பதிகம்	0—75
4.	திருவல்லம் திருப்பதிகம்	0—80
5.	திருவேற்காடு திருமயிலாப்பூர்த் திருப்பதிகம்	1—40
6.	திருவடுகூர்த் திருப்பதிகம்	0—80
7.	திருப்புறவார் பனங்காட்டூர்த் திருப்பதிகம்	0—80
8.	திருவாமாத்தூர்த் திருப்பதிகம்	0—90
9.	திருக்கச்சிமேற்றளி, திருஓணகாந்தன்தளி திருப்பதிகம்	1—50
10.	திருப்பாதிரிப்புலியூர்த் திருப்பதிகம்	1—35
11.	திருக்குரங்கணில்முட்டம் திருப்பதிகம்	0—90
12.	திருநாவலூர், திருவாமூர் திருப்பதிகம்	0—80
13.	திருவண்ணாமலை திருப்பதிகம்	1—70
14.	திருக்கள்ளில் திருப்பதிகம்	0—75
15.	திருக்காளத்தித் திருப்பதிகம்	1—50
16.	திருப்பாசூர், திருவெண்பாக்கம் திருப்பதிகம்	1—50
17.	தென் திருமுல்லைவாயில் திருப்பதிகம்	1—00
18.	திருக்கச்சியேகம்பத் திருப்பதிகம்	2—30
19.	நல்லகுடித் தலச் சிறப்பு	1—20
20.	சூரியனார்கோவில் தலச் சிறப்பு	1—75
21.	பெரம்பூர் – தலவரலாறு	1—20

(அஞ்சல் செலவு தனி)

கிடைக்குமிடம் :— செயலாளர்,
ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமை ஆதீனம்
தருமபுரம் – மயிலாடுதுறை 609 001.

Printed & Published by V. Ramaiah Pillai Manager. Dharmapuram